REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 ஏப்ரல் 2 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
1932 - 2022
வரு. 90 இல. 79 | Saturday 02,April, 2022 | 08பக்கங்கள் | 30/-

## சீமெந்து விலை 500 ரூபாவினால் அதிகரித்தது



உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் மற்றும் இறக்குமதியாகும் சீமெந்து பொதிகளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக விற்பனை முகவர்கள் தெரிவித்துள்ளனர். அதற்கமைய, 50 கிலோகிராம் சீமெந்து பொதியொன்றின் 07

# மிரிஹான; ஆர்ப்பாட்டக்காரர்களால் அரச சொத்துகளுக்கு சேதம்



ஜனாதிபதியின் இல்லம் அமைந்துள்ள மிரிஹான பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களால் சேதமாக்கப்பட்ட, எரிக்கப்பட்ட பொலிஸ் வாகனங்களையும் இச்சம்பவத்தில் படுகாயடைந்த பொலிஸ் அதிகாரி ஒருவரை சக பொலிஸார் தூக்கிச் செல்வதையும் காணலாம். (படங்கள்: சுலோச்சன கமகே)

### அரசுக்கு எதிராக நாளை நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டம்;

# ஜனநாயகத்தை மீறினால் அரசு உரிய நடவடிக்கை

### அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல எச்சரிக்கை

**ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கும் ஒரு எல்லை உள்ளது எனவும் தெரிவிப்பு**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாரிய அரச எதிர்ப்பு நடவடிக்கையொன்றை நாளை ஞாயிற்றுக்கிழமை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாக அறியமுடிகிறது. அந்த ஆர்ப்பாட்டம் ஜனநாயகத்தை பாதுகாக்கும் வகையில் முன்னெடுக்கப்படாவிட்டால் அரசாங்கம் அதுதொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமென்று அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கு ஒரு எல்லையுள்ளது. அந்த எல்லையை மீறி செயற்பட்டால் அதனை தடுப்பதற்கும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கும் அரசாங்கத்துக்கு பொறுப்பு உள்ளது என தெரிவித்த அமைச்சர், ஜனநாயகத்தையும் ஜனாதிபதியையும் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பென்றும் தெரிவித்தார்.

நேற்றைய தினம் ஜனாதிபதி ஊடக மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட செய்தியாளர் 06

## மிரிஹானயிலுள்ள ஜனாதிபதியின் இல்லம் சென்ற பிரதமர், நாமல்

### நிலைமைகளை நேரில் சென்று ஆராய்வு



மிரிஹானவிலுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லத்திற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் நேற்று சென்று பார்வையிட்டனர்.

நுகேகொடை மிரிஹான, பெங்கிரிவத்தை பகுதியில் உள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லம் அமைந்துள்ள வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் பின்னர் வன்முறையாக மாறியதால் பொலிஸார் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தி நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 07

### ஜனாதிபதியின் இல்லம் மீதான தாக்குதல்:

## அரசியல் அடிப்படைவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட வன்முறை

### JVPயும் பின்னணியில் என்கிறார் பிரசன்ன ரணதுங்க

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக ஜே.வி.பி. உள்ளிட்ட சில எதிர்த்தரப்பு அடிப்படைவாத கும்பலினால் மேற்கொள்ளப்பட்ட வன்முறையாகவே ஜனாதிபதியின் இல்லத்தின் மீதான தாக்குதலை குறிப்பிட முடியுமென சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

தேசிய சொத்துக்களுக்கும் ஜனாதிபதியின் பாதுகாப்புக்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இதுபோன்ற சம்பவத்தை 06

### மிரிஹான தாக்குதல் சம்பவம்:

## 39 மில். ரூபா சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த ஆர்ப்பாட்டம்

### விசாரணைக்கு 03 பொலிஸ் குழுக்கள் நியமனம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மிரிஹானவிலுள்ள ஜனாதிபதியின் இல்லத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் மற்றும் குழப்பகரமான சம்பவங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக மூன்று விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்தச் சம்பவத்தின் போது அரசாங்கத்தின் சொத்துக்கள் தீ வைக்கப்பட்டும் பாதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் 06

## மிரிஹான ஆர்ப்பாட்டம்; இதுவரை 54 பேர் கைது

### 53 ஆண்கள், ஒரு பெண் பொலிஸாரால் கைது



நுகேகொடை மிரிஹானவில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது கலகம் விளைவிக்கும் வகையில் செயற்பட்டதாக பெண் ஒருவர் உட்பட 54 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

சம்பவத்தின் போது காயமடைந்த உதவி பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட 5 பொலிஸ் 07

### டீசல் தட்டுப்பாடு எனினும்

## CTB பஸ்கள் சேவையில் எவ்வித தடையும் இதுவரை இல்லை



டீசல் விநியோகம் குறைவடைந்துள்ள போதிலும் அதிகூடிய எண்ணிக்கையிலான பஸ்கள் சேவைக்காக இணைக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை அறிவித்துள்ளது.

நாளாந்தம் சேவையில் இணைக்கப்படும் 5,000 இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள் தற்போது வழமை போன்று நாடளாவிய ரீதியில் சேவையில் ஈடுபடுவதாக இலங்கை போக்குவரத்து சபையின் பிரதிப் பொது முகாமையாளரான பண்டுக ஸ்வர்ணஹன்ச தெரிவித்தார். 07

### ஜனாதிபதியின் தனிப்பட்ட இல்ல தாக்குதல் முயற்சி:

## அடிப்படைவாதிகளால் திட்டமிட்ட முறையில் ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு

### ஒழுங்கமைக்கப்பட்ட குழுவினரின் செயல் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிக்கை

**இரும்பு ஆயுதங்கள் மற்றும் பொல்லுகளுடன் ஆயுதம் ஏந்திய குழுவினர் ஆர்ப்பாட்டக்காரர்களை தூண்டிவிட்டுள்ளனர்**

நுகேகொடையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் திட்டமிடப்பட்ட அடிப்படைவாதிகளால் மேற்கொள்ளப்பட்டது என்பது தெரியவந்துள்ளது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நுகேகொட ஜூபிலி கணுவ 06

## தமிழர் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு அவசியம்

### இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்



இலங்கையில் தமிழ் மக்களின் நீண்ட கால பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியான தீர்வே அவசியம் என்று மீள வலியுறுத்தி சென்றுள்ளார் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர்.

மூன்று நாள் பயணமாக இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சு.ஜெய்சங்கர் நேற்று முன்தினம் நாடு திரும்பினார். அதற்கு முன்னர் இலங்கையிலுள்ள இந்திய செய்தியாளர்களை சந்தித்து 07

### கடன் திட்டங்கள் குறித்து விரிவான முறையில்

## இலங்கை அதிகாரிகளுடன் IMF விரைவில் கலந்துரையாடல்



இலங்கைக்காக நடைமுறைப்படுத்தக்கூடிய கடன் திட்டம் குறித்து இலங்கை அதிகாரிகளுடன் வரும் நாட்களில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க உள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

அதன் பேச்சாளர் ஜெரி ரைஸை மேற்கோள்காட்டி வெளிநாட்டு ஊடகமொன்று இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த மாதம் இடம்பெறவுள்ள நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் வொஷிங்டன் விஜயத்தில் அந்தப் பேச்சுவார்த்தை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஒத்துழைப்புடனான, நிதித் திட்டத்தை நோக்கிச் செல்வது தொடர்பில், 07

## இன்று முதல் மின்துண்டிப்பு நேரத்தை குறைக்க முடிவு

### மின்சார சபைத்தலைவர் தெரிவிப்பு



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கைக்கு வரவிருக்கும் டீசல் கையிருப்பை மின்சார சபைக்கு வழங்குவதற்கு உறுதியளித்துள்ளதன் காரணமாக, இன்றுமுதல் (02) மின்வெட்டு நேரம் குறைக்கப்படும் என இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.சி.பெர்டினாண்டோ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (31) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

இதன் விளைவாக இன்று முதல் நான்கு மணி நேரத்துக்கும் குறைவான மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என 07

## தீர்வை பெற வன்முறையற்ற போராட்டங்களே சிறந்தது

### மிரிஹான சம்பவம் குறித்து அங்கஜன் MP



நாட்டிலுள்ள தற்போதைய பிரச்சினைக்கு எந்த அரசிடமும் எந்த தலைவரிடமும் உடனடி தீர்வு இல்லை. தற்போதுள்ள சிக்கலுக்குள் தீர்வு பெற வேண்டுமாக இருந்தால் நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் வன்முறை இல்லாமல் போராட்டங்களை மேற்கொண்டே தீர்வை பெறலாம் எனவும் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார். 06

**90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்**

# மிரிஹான தாக்குதல் சம்பவம்;

## தீ வைப்பு, தாக்குதல்களால் அரச சொத்துக்களுக்கு பெரும் சேதம்






படங்கள்: சுலோச்சன கமகே




















பாடசாலை பாடப் புத்தகங்களிலிருந்து

# அடிப்படைவாத போதனைகளை நீக்க ஆலோசனை முன்வைப்பு

## முஸ்லிம்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

இலங்கையின் கல்வி பாடத்திட்டத்திலுள்ள அடிப்படைவாதம் மற்றும் பிரிவினைவாதத்துக்கு இட்டுச் செல்கின்ற போதனைகள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறும், அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாத செயற்பாடுகளிலிருந்து தமது பிள்ளைகளை பாதுகாத்துத் தருமாறும் மிதவாதப் போக்குடைய முஸ்லிம்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில சி. பெரேரா, கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் எஸ். எச். ஹரிச்சந்திர ஆகியோர் "ஒரே நாடு, ஒரே சட்டத்துக்கான" ஜனாதிபதி செயலணியுடன் கடந்த, 30ஆம் திகதி கல்வி அமைச்சில் நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

குழந்தைகளின் மனதை சிறு வயதிலிருந்தே சரியாக வளர்த்தால், சிறந்த குடிமக்களை உருவாக்க முடியுமென்றும், வெளிநாட்டு அடிப்படைவாத சிந்தனைகள் பாடசாலை பாடப் புத்தகங்களில் இடம்பெற்றுள்ள விடயங்களை உடனடியாக சரி செய்ய வேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அனைத்து வருடங்களுக்குமான பாடத்திட்டங்களில் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் அச்சிடப்பட்டுள்ள பாடசாலை பாடப் புத்தகங்கள் மற்றும் ஆசிரியர் கையேடுகளில் "இஸ்லாம் மார்க்கம் மற்றும் கலாசாரம்" கீழ் அடிப்படைவாத போதனைகள் இருப்பதாக ஜனாதிபதி செயலணியினால் அமைச்சின் அதிகாரிகளுக்கு விளக்கமாக முன் வைக்கப் பட்டுள்ளது.

இலங்கையில் தண்டனைச் சட்டக் கோவையில் உள்ளடங்காத சவுக்கடி வழங்குதல், ஏனைய மதத்தினரை இஸ்லாத்திற்கு மாற்ற பணம் கொடுத்தல், வயது முழுமையடையாத பெண் பிள்ளைகளை திருமணம் செய்தல், சட்டம் இயற்றும் அதிகாரம் மனிதர்களுக்கு இல்லை என்பவை போன்ற விடயங்கள் பாடப் புத்தகங்களில் உள்ளடங்கி இருப்பதாக செயலணியின் உறுப்பினர்கள் தெரிவித்தனர். மூன்று தலாக் விவாகரத்து நடைமுறை, தமது மனைவியை அடிக்க முடியும் என்பவை போன்ற சிறுபிள்ளைகளின் மனதுக்குப் பொருந்தாத போதனைகளும் இந்த பாடப்புத்தகங்கள் மற்றும் கையேடுகளில் இடம்பெற்றுள்ளதாக ஜனாதிபதி செயலணி மற்றும் இந்த ஆய்வை மேற்கொண்ட மிதவாத முஸ்லிம் நிபுணர்கள் குழுவும் உதாரணங்களுடன் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எகிப்தில் தடை செய்யப்பட்ட பயங்கரவாதத் தலைவரான யூசுப் அல் கர்ளாவி எழுதிய புத்தகங்களும் ஆசிரியர் கையேடுகளில் கூடுதல் வாசிப்பாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளதும் தெரிய வந்துள்ளது.

முஸ்லிம்கள் அடங்கிய குழுவினால் இதற்கு முன்னர் இந்தப் பாடப் புத்தகங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும், இந்த பிழைகள் அங்கு தெரியாவிட்டாலும் அவற்றை உடனடியாக திருத்த வேண்டுமென தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்தார்.

07

# தவக்கால சிந்தனை



## இயேசுவைப் பிரதிபலிக்கும் வாழ்க்கை

தவக்காலத்தில் மனமாற்றத்திற்கான பல்வேறு செயற்பாடுகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.செப தப, ஒறுத்தல் முயற்சிகள், சிலுவைப் பாதை தியானங்கள், தவக்காலத்தில் கல்வாரி திருத்தலங்களுக்கான யாத்திரைகள் என பல்வேறு விசுவாச முயற்சிகள் மூலம் தவக்காலத்தை அனுஷ்டித்து வருகின்றோம்.

இன்றைய நற்செய்தியில் நம் ஆண்டவர் இயேசுவைப் பற்றி காவலர்கள் தெரிவிக்கும் உண்மை வெளிப்படுகிறது.

அவரே உண்மையான மெசியா என்பதை அவர்கள் நாசூக்காக தெரிவிப்பது இன்றைய நற்செய்தியில் காணப்படுகிறது. ஏனென்றால் இயேசுவைப் போல் எவரும் இதுவரை பேசியதில்லை என்பதை அவர்கள் அந்த சந்தர்ப்பத்தின் போது உணர்கின்றனர்.

இயேசு தமது செயற்பாடுகளினால் தமது உண்மையான சாயலை மக்கள் அறியச் செய்கின்றார்.

நாம் கிறிஸ்தவர்கள்.ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மக்கள் என்பதை வெளிப்படுத்துவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகள் என்ன என்பதை இந்தத் தவக்காலத்தில் சிந்தித்து பார்ப்போம்.

அதனைச் சான்று பகரும் வகையில் என்பது வாழ்க்கையின் செயற்பாடுகள் அமைகின்றனவா என்பதை மீட்டுப் பார்ப்போம்.அன்பை பிறருக்கு வழங்கும் காலமாக இந்த தவக்காலம் திகழட்டும். இக்காலங்களில் நமக்கு எதிராக செயற்பட்டவர்களை மற்றும் எமக்கு எதிரிகள் என நாம் சிந்திப்பவர்களைத் தேடிச்சென்று அவர்களுக்கு மன்னிப்பு கொடுப்பதன் மூலம் நாம் இறை மக்களாக சான்று பகர முடியும்.

நமது சமூகத்திலும் அயலிலும் வறுமை நிலையில் உள்ளவர்களுக்கு எம்மால் முடிந்த உதவிகளை செய்வதும் இறைவனுக்கு சான்று பகர்வதாகும்

அத்துடன் தேவைகளில் உள்ளோர், நோய்வாய்ப்பட்டவர்கள்,முதுமை நிலையில் உள்ளோர் ஆகியோர் ஆறுதல் அடையும் வகையில் எம்மால் எதையெல்லாம் செய்ய முடியுமோ அதை இக்காலங்களில் செய்வதன் மூலம் நாம் இயேசுவுக்கு சாட்சி பகிர்வோம். எமது ஒறுத்தல் முயற்சிகளோடு எமது அன்றாட செயற்பாடுகள் மூலம் இயேசுவுக்கு சாட்சிகளாக வாழ முயற்சிப்போம். நம் ஆண்டவர் இயேசுவை நம் பிரதிபலிக்கின்றோமா? இல்லாதவர்களுக்கு உதவுவதன் மூலம் அவரது அன்பை சமூகத்துக்கு தெரிவிக்கின்றேனா? குறிப்பாக இக்காலங்களில் அவற்றை மேற்கொள்வதற்கு அதற்கான இறையருள் வேண்டி மன்றாடுவோம்

எல்.செல்வா...

# அதாவுத செனவிரத்னவின் மறைவுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இரங்கல்

அனுபவமிக்க அரசியல்வாதியும், முன்னாள் அமைச்சருமான அதாவுத செனவிரத்னவின் மறைவு செய்தி அறிந்து நான் மிகவும் வேதனையடைந்தேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இடதுசாரி அரசியலின் செயற்பாட்டாளரான அதாவுத செனவிரத்ன, லங்கா சமசமாஜக் கட்சி ஊடாக அரசியலுக்குள் பிரவேசித்தார். ஆசிரியராக கடமையாற்றி வந்த அதாவுத செனவிரத்ன, 1954 ஆம் ஆண்டு தீவிர அரசியலில் பிரவேசித்தார்.

1970 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெலியத்த தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தி நான் புதிய பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட போது, லங்கா சமசமாஜக் கட்சியின் ருவன்வெல்ல பாராளுமன்ற உறுப்பினராக அதாவுத செனவிரத்ன விளங்கினார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆடைக் கட்டுப்பாடுடன் தொடர்புடைய காலனித்துவ மரபுகளை மாற்றுவதில் அதாவுத செனவிரத்ன முன்னிலை வகித்தார்.

அக்காலத்தில் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் செயற்பாட்டு உறுப்பினரான அதாவுத செனவிரத்ன சப்ரகமுவ மாகாண சபையின் முதலாவது எதிர்க்கட்சித் தலைவராகவும் பின்னர் மாகாண சபையின் முதலமைச்சராகவும் விளங்கினார்.

அதாவுத செனவிரத்ன 1999 ஆம் ஆண்டு லங்கா சமசமாஜ கட்சியில் இருந்து விலகி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரானார். அதன் பின்னர் அதாவுத செனவிரத்ன மாவனல்லை தொகுதி

07

# இலங்கை - நேபாள வெளிவிவகார அமைச்சர்கள் கொழும்பில் சந்திப்பு



பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டை முன்னிட்டு நேபாள வெளியுறவு அமைச்சர் கலாநிதி நாராயண் கடகா, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸை மரியாதை நிமித்தம் சந்தித்தார்(30) . கலந்துரையாடலின் போது, தொடர்ந்தும் விருத்தியடைந்து வரும் இருவழிப் பிணைப்பு குறித்து இரு நாடுகளினதும் வெளியுறவு அமைச்சர்கள் திருப்தி தெரிவித்ததுடன், அரசியல், பொருளாதார மற்றும் கலாசார உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்து கலந்துரையாடினர்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக நேபாளம் கடைப்பிடித்து வரும் கொள்கை ரீதியான நிலைப்பாட்டையும், 2022 மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது அமர்வில் இலங்கைக்கு வெளிப்படுத்தப்பட்ட ஒற்றுமையையும் பாராட்டினார்.

கொழும்புக்கும் காத்மாண்டுவுக்குமிடையே நேரடி விமான சேவையை நிறுவுவதானது, வர்த்தகம் மற்றும் சுற்றுலாத் துறையில் ஒத்துழைப்பைப் பெருக்குவதற்கு வழி வகுக்கும் என்பதால், இது விமான இணைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையென இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

சுற்றுலா, கல்வி, மின்சாரம் மற்றும் நீர் மின்சாரம் உட்பட எரிசக்தித் துறைகளில் புதிய வணிக வாய்ப்புக்களை அடையாளம் காண இரு நாடுகளினதும் வர்த்தக அறைகள் மற்றும் வணிக தொழில்

07

ஜனாதிபதியின் இல்லம் மீதான தாக்குதல்:

# ஆர்ப்பாட்டக்காரர்களுடன் இணைந்து அடிப்படைவாத கும்பல்கள் கலகம்

- அமைச்சர் திலும் அமுனுகம



லோரன்ஸ் செல்வநாயகம்

ஜுபிலி கணுவ பகுதியிலிருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்டம் ஜனாதிபதியின் இல்லத்தை நெருங்கிய போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் என்ற போர்வையில் ஜே.பி.வி உட்பட சில அடிப்படைவாத கும்பல்களும் அதில் இணைந்துகொண்டு கலகம் விளைவித்தன என போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இந்த சம்பவத்துடன் சம்பந்தப்படாத அங்கு காணப்படாத ஊடகவியலாளர்கள் கைதுசெய்யப்பட்டிருப்பார்களானால் அவர்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினமிரவு மிரிஹானையிலுள்ள ஜனாதிபதியின் இல்லத்தின் மீது ஆர்ப்பாட்டக்காரர்களினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் விசேட ஊடக சந்திப்பொன்று நேற்றைய தினம் ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு விளக்கமளிக்கும் போதே போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர்கள் கெஹெலிய ரம்புக்வெல்ல, பிரசன்ன ரணதுங்க ஆகியோரும் கலந்துகொண்ட இந்த ஊடக சந்திப்பில் அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆர்ப்பாட்டக்காரர்கள் சாதாரணமாக ஆர்ப்பாட்டத்தை செய்தபோது அவர்களுக்கு எந்த தடையும் விதிக்கப்படவில்லை. ஜுபிலி கணுவ பகுதியிலிருந்து நேற்றுப் பிற்பகல்

07

IMFவுடன் கலந்தாலோசிக்குமாறு

# ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் தலைவர் வலியுறுத்து



ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் தலைவர் ஜின் லிகுன், சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி பாலித கொஹோனவுடனான சந்திப்பின் போது, இலங்கை எதிர்கொள்ளும் தற்போதைய பொருளாதார சவால்கள் குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் ஆலோசிக்குமாறு இலங்கையை வலியுறுத்தினார்.

2030ஆம் ஆண்டளவில் இலங்கை தனது ஆற்றல் தேவைகளில் 70% ஐப் பெறுவதற்கான இலக்கை அடைய உதவும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திட்டங்களுக்கு ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் விளக்கினார்.



மிரிஹான தாக்குதல் சம்பவத்தில் சிக்கி லேக்ஹவுஸ் படப்பிடிப்பாளரான சுலோச்சன கமகே, நேற்று பலத்த காயங்களுக்குள்ளானார். ஆர்ப்பாட்டக்காரர்கள் எறிந்த கற்கள் பட்டதில் அவர் காயமடைந்துள்ளார்.

# ரூ.140 மில். பெறுமதியான 10 இலட்சம் வெளிநாட்டு சிகரட்டுகள் நேற்று அழிப்பு



சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட சுமார் ஒரு மில்லியன் சிகரெட்டுகள் நேற்று கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள சிலோன் புகையிலை நிறுவன வளாகத்தில் வைத்து அழிக்கப்பட்டன.

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 140 மில்லியன் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரட்டுகளே நேற்று (01) இவ்வாறு அழிக்கப்பட்டன. சுங்கப் பணிப்பாளர் நாயகம் விஜித ரவிப்பிரியவின் மேற்பார்வையில் நேற்று இவை அழிக்கப்பட்டன.

கடந்த வருடம் இலங்கை சுங்க திணைக்களத்தின் வருமானக் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே இந்த சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டதாகவும், இது தொடர்பில் பலர் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் சுங்கப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

# மாணவியை காணவில்லை



நீர்கொழும்பைச் சேர்ந்த பிரபல தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவியொருவரை காணவில்லையென பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவர் கடந்த 09.03.2022 அன்று காணாமல் போயுள்ளதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர். இல.120/01/01 பழைய சிலாபம் வீதி, நீர்கொழும்பு என்ற விலாசத்தைச் சேர்ந்த மதுஷிகா என்ற 17 வயது பாடசாலை மாணவியே இவ்வாறு

07

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 215.40 | 225.77 |
| கனடியன் டொலர் | 230.26 | 240.65 |
| யூரோ | 320.34 | 331.60 |
| ஜப்பான் யென் | 2.3358 | 2.4363 |
| சிங்கப்பூர் டொலர் | 213.05 | 221.22 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 378.93 | 393.31 |
| சுவிஸ் பிராங்க் | 309.42 | 322.30 |
| அமெரிக்க டொலர் | 288.74 | 298.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹரின் டினார் | 782.37 | கட்டார் ரியால் | 80.93 |
| குவைத் டினார் | 968.90 | சவூதி ரியால் | 78.63 |
| ஓமான் ரியால் | 766.18 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 80.31 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் பங்குனி மாதம் 19ம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷஃபான் பிறை 29

### குறள் தரும் சிந்தனை



வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்

விருந்தினரை முன்னே போற்றி உணவளித்து மிஞ்சிய உணவை உண்டு வாழ்கின்றவனுடைய நிலத்தில் விதையும் விதைக்க வேண்டுமோ?

# அரச விரோத சக்திகளின் திட்டமிடப்பட்ட வன்முறை

எமது நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியை, அரசுக்கு விரோதமான சில சக்திகள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு முற்படுவது தெளிவாகத் தெரிகின்றது. வன்முறைக் கும்பல்களை திரைமறைவில் இருந்தபடி தூண்டிவிட்டு, குழப்பநிலைமையை நாட்டில் உருவாக்குவதற்கு அரச விரோத சக்திகள் முற்படுவதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

கொழும்புக்கு அருகேயுள்ள நுகேகொடை பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ள வன்முறை சம்பவமானது இதற்கான ஒரு உதாரணம் ஆகும். அங்கு இடம்பெற்றிருப்பது திடீரென உருவெடுத்த ஒரு வன்முறை சம்பவம் அல்ல. முன்கூட்டியே நன்கு திட்டமிடப்பட்ட முறையில், பெரும் களேபரமொன்று அங்கே நடந்து முடிந்துள்ளது.

பொலிஸாரால் நிலைமையை உடனடியாகவே கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு இயலாதவாறு, வன்முறைக் கும்பல்கள் அவ்விடத்துக்கு முன்கூட்டியே கொண்டு வரப்பட்டிருப்பதைப் பார்க்கின்ற போது, அங்கு நடந்துள்ள சம்பவங்களின் பின்னணியில் அரச விரோத சக்திகள் மறைந்திருப்பது நன்கு புலனாகின்றது. ஆகவே நன்கு திட்டமிடப்பட்டு கலவரமொன்று அங்கே நடத்தி முடிக்கப்பட்டுள்ளமை உறுதியாகின்றது.

அரசாங்கத்தை விமர்சிப்பதற்கோ அல்லது கண்டனம் தெரிவிப்பதற்கோ சாத்விகமான வழிமுறைகள் உள்ளன. எமது நாட்டில் தற்போது ஊடக சுதந்திரம் முழுமையாகவே உள்ளது. முழுநேரமும் அரசுக்கு விரோதமான செய்திகளை வெளியிட்டவாறு ஒருசில தொலைக்காட்சிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. சில இணையத்தளங்களும், அச்சு ஊடகங்களும் அரச விரோத செய்திகளுக்கே முன்னுரிமை அளித்தவாறு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நாட்டில் ஊடக சுதந்திரம் முழுமையாக பேணப்படுவதன் காரணமாகவே அந்த ஊடகங்களால் அவ்வாறெல்லாம் தன்னிச்சையாகச் செயற்படுவதற்கு முடிகின்றது. அரசு மீதான எதிர்மறை விமர்சனங்களும், கண்டனங்களும் அந்த ஊடகங்களில் தாராளமாகவே இடம்பெறுகின்றன.

அதேபோன்று அரசாங்கத்தை ஆட்சேபிப்பதற்கு சாத்விகமான வேறு வழிமுறைகளும் உள்ளன. பொதுமக்களுக்கோ, அரச உடைமைகளுக்கோ, அரசாங்க சேவைகளுக்கோ பாதிப்பு ஏற்படுத்தாத விதத்தில் அமைதியான போராட்டங்களை மேற்கொள்வதற்கு எமது நாட்டில் முழுமையான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. எதிரணியினர் சமீபத்தில் மக்கள் பலரை வாகனங்களில் ஏற்றிவந்து கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்திய வேளையில், அரசாங்கம் அதற்குத் தடை விதிக்கவில்லை.

எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்காக அஹிம்சை வழியில் போராடுவதில் தவறு கிடையாது. ஆனால் அரசாங்கத்தையோ, அல்லது பொருளாதார நெருக்கடியையோ ஆட்சேபிப்பதென்பதன் பேரில் 'காட்டுத் தர்பார்' நடத்துவதை ஒருபோதுமே அனுமதிக்க முடியாது. அரச உடைமைகளுக்கோ அல்லது பொதுமக்களுக்கோ பாதிப்புகளை ஏற்படுத்தும் விதத்தில் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுமானால், வன்முறையை கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வது அரசின் பொறுப்பாகுமென்பதை வன்முறைக்குக் காரணமானவர்கள் புரிந்துகொள்வது அவசியம்.

நுகேகொடை வன்முறையின் போது அரசாங்க சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. அரசாங்க வாகனங்கள் கல்வீச்சுக்கு இலக்காகியுள்ளன. பல வாகனங்கள் தீக்கிரையாகியுள்ளன. அருகிலுள்ள கட்டடங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. அவை தீவைக்கப்பட்டும் உள்ளன. நாட்டில் குழப்பநிலைமையொன்றை ஏற்படுத்த வேண்டுமென்பதே அச்சம்பவங்களின் உள்நோக்கமென்பது தெரிகின்றது.

வன்முறைக் கும்பல்களைச் சேர்ந்த பலர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலும் பலர் தேடப்படுவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விரிவான விசாரணைகளை நடத்தி, வன்முறையின் பின்னணியில் உள்ள சக்திகளைக் கண்டறிய வேண்டும் என்பதே அமைதியை விரும்புகின்ற மக்களின் வேண்டுகோள் ஆகும். இச்சம்பவத்தின் பின்னணியில் அரசியல் நிகழ்ச்சித்திட்டம் உள்ளதென்பது தெளிவாகின்றது.

தேசத்தின் மீது உண்மையான பற்று இருப்போர் அரசாங்க உடைமைகளுக்கு ஒருபோதுமே சேதம் ஏற்படுத்த முன்வரமாட்டார்களென்பதை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும் விரும்புகின்ற எவருமே இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான சம்பவங்களில் ஈடுபடமாட்டார்கள்.

நாட்டில் தற்போது பொருளாதார நெருக்கடி நிலவுவது மறைக்கப்படக் கூடிய தகவல் அல்ல. பொருட்களின் விலையேற்றம், எரிபொருள் பற்றாக்குறை போன்றவற்றுக்கெல்லாம் காரணம் பொருளாதார நெருக்கடி ஆகும். உலகளாவிய பெருந்தொற்று காரணமாக எமது நாடு இரு வருட காலமாக முடங்கிப்போனதன் மறைமுக விளைவுதான் இன்றைய நெருக்கடியாகும்.

ஆனாலும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அரசாங்கம் தற்போது கடுமையான பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றது. வெகுவிரைவில் எமது நாடு மீண்டெழுந்து விடுமென்ற நம்பிக்கை தோன்றியுள்ளது. அதுவரை மக்கள் பொறுமைகாக்க வேண்டியது அவசியம்.

இவ்வாறான இன்றைய தருணத்தில், அரச விரோத சக்திகளின் சதிவலையில் வீழ்ந்து விடாமல் மக்கள் அவதானமாக இருப்பது அவசியம். ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கில் பொதுமக்களை பலிக்கடாக்கள் ஆக்குவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளிலிருந்து பொதுமக்கள் விலகியிருக்க வேண்டும்.

editor.tkn@lakehouse.lk

# நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அனைத்து பத்திரிகைகளையும் வெளியிட முடிந்தது நாம் பெற்ற வெற்றியாகும்

## சிலுமின பத்திரிகையின் 92ஆவது ஆண்டு நிறைவு தின விழாவில் லேக் ஹவுஸ் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி டபிள்யூ. தயாரத்ன

நாட்டில் எவ்வளவு தடைகள் வந்தாலும் எந்த ஒரு பத்திரிகையையும் நிறுத்தாது அச்சிட்டு வாசகர்களுக்கு வழங்க முடிந்தது லேக்ஹவுஸ் பெற்ற வெற்றியாகும் என லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி டபிள்யூ. தயாரத்ன தெரிவித்தார்.

அன்று தொடக்கம் இன்று வரை ஊழியர்களுக்காக தங்களது அதிகபட்ச கடமைகளை நிறைவேற்றி வருவதாகவும் எவ்வளவு தடைகள் வந்தபோதும் அவற்றை வெற்றி கொண்டு பத்திரிகைத் தொழிலை முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

சிலுமின பத்திரிகைக்கு 92 வருடங்கள் பூர்த்தி அடைந்ததை முன்னிட்டு லேக்ஹவுஸ் வளாகத்தில் நடைபெற்ற விழாவில் கடந்த 30 ஆம் திகதி கலந்து கொண்ட போதே அவர் இதனை தெரிவித்தார்.



சிலுமின பத்திரிகையில் ஆரம்பகாலம் தொட்டு இதுவரைக்கும் ஆசிரியர்களாக பணிபுரிந்தவர்களது புகைப்பட படிகம் மற்றும் ஊடக தொழிலில் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் 1995 ஏப்ரல் 29 ஆம் திகதி கொலை செய்யப்பட்ட சிலுமின ஊடகவியலாளர்ளான சிலுமின இணை ஆசிரியர் கருணாரத்ன சபுதந்த்ரி, சிலுமின பத்திரிகையின் பிரதி செய்தி ஆசிரியர் கிரம பியசோம, புகைப்படக் கலைஞர் எட்வின் வீரசிங்க ஆகியோரை நினைவு கூரும் முகமாக அவர்களின் புகைப்படங்களும் திறந்து வைக்கும் நிகழ்வும் லேக் ஹவுஸ் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி தலைமையில் நடைபெற்றது. இங்கு தொடர்ந்தும் உரையாற்றியவர்,.

எட்மன் ரணசிங்க போன்ற சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் இந்த விழாவிற்கு வருகை தந்துள்ளதையிட்டு நாம் பெருமை அடைகின்றோம். சிலுமின பத்திரிகையின் ஊடகவியலாளர்கள் ஐந்து பேர் கடந்த 22ஆம் திகதி விசேட பத்திரிகை விருதுகளை பெற்றுக் கொண்டார்கள். சிலுமின பத்திரிகைக்கு நீண்டகால வரலாறு உண்டு. விசேடமாக 92 வருடங்கள் சிங்கள பத்திரிகை ஒன்றை நடத்தி செல்வது என்பது கஷ்டமான பணியாகும். சிலுமின பத்திரிகை இன்றும் வெளிவருகிறது அதுபற்றி நாம் மகிழ்ச்சியடைகின்றோம். சிலுமின பத்திரிகையின் ஆசிரியர் தர்மன் தனது பாரிய முயற்சியால் நிறுவனத்தின் கௌரவத்தையும் பாதுகாத்து ஆசிரியர் குழாம் அங்கத்தவர்களின் உதவியுடன் பத்திரிகையை நடத்திச் செல்கின்றார்.

லேக்ஹவுஸ் நிறுவனத்துக்குக்கு பாரிய சரித்திரம் உண்டு. எந்தவொரு பத்திரிகையும் எச்சந்தர்ப்பத்திலும் நிறுத்தாமல் தொடர்ந்து வெளிவருவது விசேட அம்சமாகும். விசேடமாக நாளாந்த பத்திரிகைகளான தினமின, டெய்லி நியூஸ், தினகரன் மற்றும் சிலுமின, சன்டேஒப் சேவர் ஆகியன அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டு வருகின்றன. சிறுவர் ,மகளிர் ,சுகாதார பத்திரிகைக் கலையை உருவாக்குவதற்கு சிலுமின பத்திரிகை முன்னின்று உழைத்தது. 1996ஆம் ஆண்டு ரஸதுன மேலதிக இணைப்பு ஆரம்பமானது. எமக்கு பெரும் சவால்கள் உள்ளன. சிலுமின பத்திரிகையில் எமக்கு வாசிக்கக்கூடிய அம்சங்கள் நிறைய காணப்படுகின்றன. 10 சத பல்கலைக்கழகம் என அன்று சிலுமின பத்திரிகையை அழைத்தார்கள். நானும் அதனை ஏற்றுக் கொள்கின்றேன். அந்த நாளிலிருந்து நான் சிலுமின பத்திரிக்கையை வாசிக்கின்றேன். போட்டி பத்திரிகைகள் உருவாவதால் எமக்கு சவால்கள் உள்ளன. நாட்டில் தற்போது காணப்படும் நிலைமையால் கடதாசி பற்றாக்குறை எமக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பத்திரிகையை அச்சிட கடதாசி அவசியமாகும். இளைய தலைமுறையினர் பத்திரிகை வாசிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. இளைஞர்கள் இலத்திரனியல் ஊடகங்களை பாவிப்பதால் எமக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பத்திரிகைக்கான பிரபல்யம், கௌரவத்தை எதிர்காலத்திலும் முன்னெடுத்துச் செல்ல நாம் அனைவரும் இணைந்து நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். அதனை ஊக்குவிக்கும் வகையிலேயே இந்த விழா அமைந்துள்ளது எனக் கூறலாம். லேக் ஹவுஸ் நிறுவன ஊழியர்களுக்கு எம்மால் முடிந்த அனைத்தையும் செய்வோம். சமூகத்திலுள்ள அனைத்து சவால்களுக்கும் முகம் கொடுத்து பத்திரிகையை முன்னெடுத்து செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# சென்னையில் பன்னாட்டு தமிழ் தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சி கருத்தரங்கம்

உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு ஏற்பாட்டில் பன்னாட்டு தமிழ் தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சி கருத்தரங்கம் சென்னையில் ஜுன் மாதம் இரண்டாவது வாரத்தில் நடைபெற உள்ளது. அந்நிகழ்வில் இணைய தொழில்நுட்ப வல்லுனர்களை உருவாக்கவும், மாணவர்களின் கண்டுபிடிப்புகளை அங்கீகாரம் வழங்கி தொழிலதிபர்களாக உருவாக்கவும், துறை சார்ந்த வேலைவாய்ப்பு பற்றி விழிப்புணர்வு மற்றும் தேர்தல் முறையை எளிதாக்கவும், தமிழ் மொழி சார்ந்த மென்பொருளை உருவாக்க இந்த பன்னாட்டு தமிழ் தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சி கருத்தரங்கம் வாய்ப்பாக அமையும்.

இந்நிகழ்வில் பன்னாட்டு நிறுவனங்கள் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், கணனி தயாரிப்பு நிறுவனங்கள், மென்பொருள் ஏற்றுமதி நிறுவனங்கள், அரசு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சகங்கள், இணைய கல்வி கழகங்கள், மாநில மத்திய அரசு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், பல்வேறு மாநில தகவல் தொழில்நுட்ப அமைச்சர்கள், பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், கணனி உதிரிபாகங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள், மென்பொருள் பாதுகாப்பு மற்றும் உதிரிபாகங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள், இவை அனைத்து நிறுவனங்களும், தகவல் தொழில்நுட்பத்தில் தமிழகம் என்ற காட்சியகத்தில் அரங்கம் அமைக்க உள்ளன.

இந்நிகழ்வில் இணையவழியில் தமிழை மேம்படுத்தும் விதமாக பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்கள் இணையவழியில் தமிழை கற்கவும், தமிழ் மொழியின் சிறப்பை ஆவணப்படுத்துவோம். தமிழர்கள், தகவல் தொழில்நுட்பத்தில் சிறந்த வல்லுனர்களாக ஆகவும் இந்த பன்னாட்டு தமிழ் தகவல் தொழிநுட்ப ஆராய்ச்சி கருத்தரங்கம் பேருதவியாக இருக்கும்.

இன்றைய காலகட்டத்தில் பெரும் சவாலாக உள்ள சைபர் கிரைம் அதிகமாக உள்ளதால் மக்கள் பல சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். சைபர் கிரைம் மூலம் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து மக்களை பாதுகாக்க பல்வேறு மென்பொருள்களை உருவாக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். அன்றாட வாழ்வில் இணைய தொழில்நுட்பம் இல்லாமல் வாழ முடியாது என்ற சூழ்நிலை உள்ளதால் மாணவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபடவும் அதனடிப்படையில் வேலைவாய்ப்பு உறுதி செய்யவும் இந்த கருத்தரங்கம் மற்றும் காட்சியகம் பேருதவியாக இருக்கும்.






ITITRC
International Tamil Information Technology Research Conference
பன்னாட்டு தமிழ் தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சி கருத்தரங்கம்

உலகில் தகவல் தொழில்நுட்ப துறையில் தமிழர்கள் குறிப்பிட்ட சதவீதத்தில் இருப்பதும் அதன்மூலம் அதிகப்படியான வேலைவாய்ப்பினை உருவாக்க முடியும்.

மேலும் இந்த நிகழ்வில் உலகெங்கும் உள்ள மாணவர்கள் தங்கள் அரியவகை கண்டுபிடிப்புகளை ஆராய்ச்சிக் கட்டுரையாக சமர்ப்பிக்கவும் வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ளவும் பார்வையாளர்களாக கலந்து கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரண்டு நாள் நடக்கும் இந்த நிகழ்வில் தகவல் தொழில்நுட்பத் துறை சார்ந்த வல்லுநர்கள் பத்து அமர்வுகளில் கருத்தரங்கம் நடத்தவுள்ளனர். அதில் தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள், பள்ளி இறுதிப் படிப்பு மாணவர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டு பயனடைய வேண்டும் என உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவரும் இந்நிகழ்ச்சியின் ஏற்பாட்டுக் குழு தலைவர் செல்வகுமார் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இலங்கை தமிழ் பேசும் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவார்

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் இலங்கையில் தமிழ் பேசும் அனைத்து மக்களின் எதிர்பார்ப்புகளை அரசின் துணையோடு நிச்சயம் செய்வார் என்ற அழுத்தமான நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. வடகிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் உரிய அரசியல் பிரதிநிதித்துவத்துடன் தங்களுக்கு உரியதை இந்த நாட்டில் இருந்து பெற்றுக் கொள்ள வழிவகை செய்ய வேண்டும். இந்திய வெளியுறவு துறை அமைச்சர் ஜெய்சங்கரிடம் கூட்டாகவும், தனிப்பட்ட முறையிலும் அவரிடம் நாங்கள் பேசியிருக்கிறோம். இது தொடர்பில் தினகரன் நாளிதழுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. வழங்கிய சிறப்பு பேட்டி.



கேள்வி: சமீபத்தில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் டுபாய் சென்ற போது நீங்கள் சென்றிருந்தீர்கள். யார் அழைப்பின் பேரில் சென்றீர்கள்?

பதில் : அமீரகத்தில் வசிக்கும் எனது ஆருயிர் நண்பர்கள் சிலர், தமிழக முதல்வர் அங்கு வருவதைச் சுட்டி, என்னையும் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்ற வேண்டும் என்று அன்பாகக் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில், முதல்வர் அவர்களின் வருகைக்கு கண்ணியம் செலுத்தும் வகையில் நானும் அங்கு சென்று கலந்து கொண்டேன். அமீரகத்தில் பணிபுரியும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள், பல்லாண்டு காலமாக அங்கு வணிகம் செய்து கொண்டிருக்கக் கூடிய தொழிலதிபர்கள், தனவந்தர்கள் என எல்லோரும் குடும்பத்தோடு கூடினர். ஒரு மிகப்பெரிய நிகழ்ச்சியான அந்த நிகழ்ச்சியில் இலங்கை வாழ் தமிழ் முஸ்லிம்களின் குரலாக நானும் அங்கு உரையாற்றியதை எனக்குக் கிடைத்த மகிழ்ச்சிக்குரிய அம்சமாக நான் கருதுகிறேன்.

கேள்வி: டுபாய் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நீங்கள் முதல்வரை தனிப்பட்ட முறையில் சந்தித்தீர்களா? அல்லது சென்னைக்கு வந்து முதல்வர் மு.க. ஸ்டாலினை சந்திக்க திட்டம் எதுவும் இருக்கிறதா?

பதில்: அங்கிருந்த நெருக்கடியான நிகழ்ச்சி நிரல்களுக்கு இடையே தனிப்பட்ட முறையில் அவரைச் சந்திக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குத் தோன்றவில்லை. விரைவில் தமிழகத்திற்கு வந்து, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து, இருதரப்பு விவகாரங்கள் குறித்து சற்று நேரம் கருத்துப் பரிமாறலாம் என்று இருக்கிறேன்.

கேள்வி: "இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு நாங்கள் முழு ஆதரவளிப்போம்" என்றும், "நெருக்கடி காரணமாக புலம்பெயர்ந்து இந்தியா வந்துள்ளவர்களை கண்ணியத்துடன் நடத்த வேண்டும்" என்றும் தமிழக முதல்வர் அண்மையில் அறிவித்திருக்கிறாரே? இது குறித்து உங்கள் கருத்தென்ன?

பதில்: இதில் ஒன்றும் வியப்பில்லை. காரணம், இது காலங்காலமாக அவர்கள் இலங்கைத் தமிழர்களுக்குத் தந்து கொண்டிருக்க கூடிய ஆதரவுதான். தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இலங்கையில் தமிழ் பேசக்கூடிய எல்லா மக்களுக்கும் தேவையான நலவுகளை இங்குள்ள ஒன்றிய அரசின் துணையோடு நிச்சயம் செய்வார் என்ற அழுத்தமான நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

கேள்வி: இலங்கைத் தமிழர்களுக்கு என தமிழக அரசு நிறைய உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறது. குறிப்பாக அவர்கள் இங்கேயே குடியிருப்பதற்குத் தேவையான வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறது. இது தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உடைய கருத்து என்ன?

பதில்: போரால் பாதிக்கப்பட்டு இலங்கைத் தமிழர்கள் குடிபெயர்ந்து இந்தியா வந்துள்ள நிலையில் அவர்களைக் குடியமர்த்த, அவர்களுக்குக் கல்வி வழங்க, அவர்களது பொருளாதார நிலையை மேம்படுத்த தமிழக அரசு நல்ல பல திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில், தற்போதைய முதல்வர் மு.க. ஸ்டாலின் அதை இன்னும் சில படித்தரங்களுக்கு உயர்த்தி இருக்கிறார்.

கேள்வி: இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் அண்மையில் இலங்கைக்கு வந்திருந்தபோது, 13ஆவது திருத்தச்சட்டம் குறித்து விவாதித்திருந்தார். அது பற்றி கூறுங்களேன்.

பதில்: அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கைக்குப் புதியவரல்ல.இலங்கையில் உள்ள அரசியல் தொடர்புடையவர்களுக்கு அவருடன் நெருக்கமான இணக்கம் உண்டு. இலங்கையில் உள்ள இனப்பிரச்சினை தொடர்பாக அனைத்து கோணங்களிலும் விரிவாகத் தெரிந்து வைத்திருக்கக் கூடிய அவர் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்று, தற்பொழுது இலங்கை வந்துள்ள நிகழ்வு இது தொடர்பாக நல்ல பல முன்னேற்றங்களை நல்கும் என்ற நம்பிக்கை நாட்டு மக்களுக்கு இருக்கிறது.

13ஆவது சட்டத் திருத்தம் என்பது இந்திய -இலங்கை ஒப்பந்தத்தின் படி நடைமுறைப் படுத்தப்பட்ட ஒன்று. அதை பலவீனப்படுத்த பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. வடகிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் உரிய அரசியல் பிரதிநிதித்துவத்துடன் தங்களுக்கு உரியதை இந்த நாட்டில் இருந்து பெற்றுக் கொள்ள வழிவகை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி கூட்டாகவும், தனிப்பட்ட முறையிலும் அவரிடம் நாங்கள் பேசியிருக்கிறோம்.

கேள்வி: இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரின் தற்போதைய இலங்கை வருகையின் போது 6 ஒப்பந்தங்களை நிறைவேற்றி இருக்கிறார்கள். இது குறித்த உங்கள் பார்வை என்ன?

பதில்: என்னுடைய பேச்சுவார்த்தையின் போது, இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள பௌத்த மத தொடர்பாளர்களுக்கான தொடர்புகள் என்ற நிலையையும் தாண்டி, சகல மதங்களும் இலங்கையில் வேரூன்றுவதற்கு இந்தியாவிலிருந்து வந்த முன்னோடிகளும், மத போதகர்களும் செய்த போதனைகள், காட்டிய வழிகள் உள்ளிட்ட அவர்களின் பங்களிப்புகள் காரணமாக இருந்திருக்கின்றன... எனவே இலங்கையில் உள்ள சகல மதங்களும், சகல மதத்தினரும் பயன்பெறும் வகையில் பெருந்தன்மையுடன் கூடிய பரந்துபட்ட ஊக்குவிப்பையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதற்கான இருதரப்பு உடன்பாடுகள் எட்டப்பட வேண்டும் என்பதை நாங்கள் அமைச்சரிடம் அழுத்தமாக வலியுறுத்தி இருக்கிறோம்.

கேள்வி: நிறைவாக ஒரு கேள்வி... புனித ரமழான் மாதம் வருகிறது. பேரீச்சம்பழத்துக்கான வரியை குறைக்க முடியாமல் இருக்கிறதே? இது குறித்து உங்கள் கருத்தென்ன?

பதில்: நோன்பு காலத்தில் பேரீச்சம் பழத்திற்கு வரி உயர்த்தப்பட்டு இருப்பது விமர்சனத்துக்குரிய ஒன்றுதான் என்றாலும் கூட, பொதுவாகவே இந்த நாட்டில் அத்தியாவசியப் பொருட்கள் அனைத்துக்குமே இதுதான் நிலைமை. இப்படி ஒரு இக்கட்டான நிலையில் இந்திய அரசின் மானிய உதவிகள் அண்மைக்காலமாக தாராளமாக வந்தது எங்களுக்கெல்லாம் சற்று ஆறுதலைத் தந்திருக்கிறது. ஆனால் இலங்கையின் கடன் சுமையைக் குறைப்பதற்காக தொடர்ந்து இந்தியா உட்பட வெளிநாடுகளின் உதவிகளை மட்டும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பது இலங்கை நாட்டை வளர்ச்சிக்குக் கொண்டு செல்லாது.

நேர்காணல்:
திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது...

# பனங்கைத்தொழிலை மேம்படுத்தும் தேசிய வேலைத்திட்டம்

சாவகச்சேரி விசேட நிருபர்



பனை அபிவிருத்திப் பாதையில் 'ஒரு விடியல்' எனும் தொனிப் பொருளில் பனங்கைத்தொழிலை மேம்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்தில் இடம்பெற்றது.

பனைஅபிவிருத்திச் சபைத் தலைவர் கிரிஷாந்த பத்திராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரன, கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பனை தென்னை வள இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்டிருந்தனர்.

பனங்கைத்தொழிலை மேம்படுத்தும் முகமாக வடமாகாணத்திலுள்ள பனைசார் கைத்தொழிலாளர்களுக்கு துவிச்சக்கரவண்டி, பனைசார் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கான உபகரணங்கள் ஆகியன வழங்கி வைக்கப்பட்டன. இதற்காக 200 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் இந்நிகழ்வில் பனைசார் ஆராய்ச்சிகளை முன்னெடுப்பது தொடர்பாக பனை அபிவிருத்திச் சபைக்கும் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவபீடத்திற்கும் இடையில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

மேலும் இந்நிகழ்வில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்,கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், இந்திய தூதரக பதில் துணைத் தூதர், யாழ் பல்கலைக்கழக உபவேந்தர், வவுனியா பல்கலைக்கழக உப வேந்தர், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் பிரதிநிதி, பனை அபிவிருத்திச் சபை அதிகாரிகள், பயனாளிகள் உள்ளிட்ட பலரும் பங்குபற்றியிருந்தனர்.

# பனங்-கள் ஏற்றுமதியில் வருமானத்தை ஈட்டலாம்

சாவகச்சேரி விசேட நிருபர்



பனங் கள்ளினை வெளிநாட்டிற்கு அனுப்பி அதனூடாக அந்நிய செலாவணியை ஈட்டுவதே எமது நோக்கம் என இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். கடந்த 31/03 வியாழக்கிழமை கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்தில் இடம்பெற்ற உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் ;

நாட்டில் பனை உற்பத்தி நீண்ட காலமாக மக்களின் வாழ்வியலுடன் ஒன்றித்துக் காணப்படுகிறது.

தென் பகுதியில் தென்னை மரம் போன்று வட பகுதியில் பனை மரம் மக்களின் கலாசாரத்தோடு பின்னிப் பிணைந்துள்ளது. ஆனால் இன்று வடக்கு கிழக்கை போன்று புத்தளம், அம்பாறை அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளிலும் பனம் செய்கை உருவாகி வருகிறது. அனைத்து பனை மரங்களில் இருந்தும் பயன் பெற வேண்டும்.பனை மரங்களின் பராமரிப்பு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டிய காலமிது. வடக்கில் பனங் கள் உற்பத்தி முக்கிய கைத்தொழிலாக உள்ளது. இங்கு உற்பத்தியாகும் கள்ளினை வெளிநாட்டிற்கு அனுப்பி அன்னிய செலாவணியை ஈட்டுவதே எமது நோக்காக உள்ளது. அதற்கான நடவடிக்கையையும் எடுத்து வருகிறோம். எமது அரசாங்கம் ஆட்சி அமைத்த போது கள் உற்பத்திக்கான வரியை அகற்றி உற்பத்தியாளர்களுக்கு பாரிய சலுகை வழங்கி இருந்தோம். பனம் கள் உற்பத்தியாளர்களுக்கு அனைத்து சலுகைகளையும் வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதே எமது நோக்கம்.பனங் கள்,பனங் கருப்பட்டி, பனம் பாணி, பனை சார் உணவுப் பொருள் உற்பத்தியாளர்களுக்கு அரசாங்கம் அனைத்து சலுகைகளையும் வழங்கி வருகிறது. வடக்கில் இருந்து வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்கள் ஊடாக பனை சார் உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி அன்னிய செலாவணியை ஈட்ட நடவடிக்கை எடுக்கிறோம் என அவர் தெரிவித்தார்.

# யாழில் போராட்டத்தில் குழப்பம்



யாழ். விசேட நிருபர்

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கும் எதிர்ப்பு தெரிவித்து யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் குழப்பம் ஏற்படுத்தப்பட்டன.

இப்பேரணி யாழ் மாவட்ட செயலகத்திலிருந்து யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தை வந்தடைந்த இறுதி நேரத்தில் அங்கு ஜனாதிபதிக்கு ஆதரவாக குழுவொன்று குரல் எழுப்பிய வேளை முறுகல் நிலை உருவானது.

இந்நிலையில் சமூக செயற்பாட்டாளர் அருளானந்தம் அருண் சித்தார்த்துக்கும் முன்னாள் பாராளுமன்ற எம்.பி ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கும் இடையில் பெரும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டிருந்தது.

முறுகல் நிலை ஏற்பட்டதுடன் கைகலப்பும் உருவானது. பதற்றத்தை தணிப்பதற்காக பொலிஸார் குவிக்கப்பட்டு அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதுடன் கைகலப்பில் சிலர் காயமடைந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட ஐக்கிய மக்கள் கட்சியினர் தொடர்ந்தும் அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்ததுடன் குழப்பவாதிகளுக்கு எதிராகவும் கோஷம் எழுப்பினர்.

குழப்பத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் அங்கிருந்து பாதுகாப்பாக முச்சக்கர வண்டியில் அனுப்புவதற்கு முயற்சித்த வேளை போராட்டக்காரர்கள் முச்சக்கர வண்டியையும் முற்றுகையிட்டனர். பெரும் பிரயத்தனத்திற்கு மத்தியில் பொலிஸார் முச்சக்கர வண்டியை அங்கிருந்து அனுப்பி வைத்தனர்.

# தாவடியில் வன்முறை சம்பவம்

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம் தாவடியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த வன்முறைக் கும்பல் மோட்டார் சைக்கிள்களுக்கு தீ வைத்தும் பெறுமதியான பொருட்களை சேதப்படுத்தியும் அட்டூழியத்தில் ஈடுபட்டு விட்டு தப்பி சென்றுள்ளனர்.

மின்வெட்டு வேளையில் நேற்று வியாழக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

முதியவர்கள் மூவர் வசிக்கும் வீடு மீதே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் கொண்ட கும்பலே இந்த தாக்குதலை மேற்கொண்டதாக சுன்னாகம் பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# சமஷ்டி முறையில் அரசியல் யாப்பு அமைய வேண்டும்

(தலைமன்னார் விஷேட நிருபர்)



தமிழர்களின் இருப்பு எதிர்காலத்தில் கேள்விக் குறியாக போகும் என்ற காரணத்தினாலும் சமஷ்டி முறையில் அரசியல் யாப்பு அமைய வேண்டும் என்ற நோக்கில் தந்தை செல்வா இலங்கை தமிழரசுக் கட்சியை உருவாக்கியிருந்தார் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர்களின் தந்தை செல்வாவின் 124வது பிறந்த தினத்தை முன்னிட்டு மன்னார் நகரில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு வியாழக்கிழமை (31.03.2022) காலை மாலை அணிவித்த பின் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கருத்து தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் தமிழருக்கு சமத்துவம் வேண்டும். தமிழர்களின் இருப்பு எதிர்காலத்தில் கேள்விக்குறியாக போகும் என்ற காரணங்களினால் சமஷ்டி முறையில் அரசியல் யாப்பு அமைய வேண்டும் என்ற நோக்கில் தந்தை செல்வா இலங்கை தமிழரசுக் கட்சியை உருவாக்கியிருந்தார்.

அவர் அக்கட்சியை உருவாக்கி 70 வருடங்கள் கடந்தும். அந்த சமஷ்டி முறையான அரசியல் அமைப்பை இன்னும் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் தமிழராகிய நாம் தொடர்ச்சியாக போராடி வருகின்றோம்.

தந்தை செல்வநாயகம் ஜனநாயக வழியில் போராடியவர். அந்த வழியில் அவர் போராடியதுடன் இவர் மேற்கொண்ட ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டமையால் இவர் வட்டுக்கோட்டை தீர்மானம் ஊடாக தமிழீழ பிரகடனத்தை மேற்கொண்டார்.

## மலைச்சாரல்

# யுவதியை காணவில்லை

பதுளை விசேட நிருபர்

பதுளை பகுதியைச் சேர்ந்த யுவதியொருவர் நுவரெலியா – ராகலை பகுதியில் காணாமல் போயுள்ளதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

தனது சகோதரியின் வீட்டிற்கு சென்ற போதே காணாமல் போயுள்ளார்.

20 வயதான கணேசமூர்த்தி காயத்திரி (நித்யா) என்ற யுவதியே மார்ச் மாதம் 07ஆம் திகதி காலை வேளையில் இவ்வாறு காணாமல் போயுள்ளதாக அவரது சகோதரியான கணேஷமூர்த்தி துர்கா தெரிவித்தார்.

யுவதி காணாமல் போன சம்பவம் தொடர்பில் ராகலை பொலிஸ் நிலையத்தில் கடந்த 7ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும், இதுவரை பொலிஸார் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக ராகலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கணேசமூர்த்தி காயத்திரி தொடர்பான தகவல்கள் கிடைக்கும் பட்சத்தில், 0776320266 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து அறிவிக்குமாறு அவரது உறவினர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.



பதுளை மாவட்ட பிரதேச சபைகள் மற்றும் மாநகர சபைகள், நகர சபைகள் ஆகியவற்றின் பெண் உறுப்பினர்களின் மேம்பாடுகளை முன்னிலைப்படுத்தி,பதுளை மகளிர் அபிவிருத்தி அமைப்பினர், எஸ்.எப்.சி.ஜி. மற்றும் வில் கிலப் அமைப்புக்களுடன் இணைந்து பதுளை ஹெரிடேஜ் கிரான்ட் விடுதியில் செயலமர்வு ஒன்றை மேற்கொண்டிருந்தனர். படம் பதுளை தினகரன் விசேட நிருபர் பிரதேச

# நுவரெலியா வசந்த கால ஆரம்ப நிகழ்வுகள் இடைநிறுத்தம்

நுவரெலியா தினகரன் நிருபர்



நுவரெலியா வசந்த கால ஆரம்ப நிகழ்வுகள் நேற்று (01.04.2022) வழமைபோல காலை 8.30 மணியளவில் கிரகறி வாவிக்கு அருகாமையில் அமைக்கப்பட்டிருந்த விசேட மேடைக்கு முன்பாக ஆரம்பமானது.

மாநகர சபை முதல்வர் சந்தனலால் கருணாரத்ன தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் நுவரெலியா மாநகர சபை உறுப்பினர்கள் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன் கலபட உட்பட பலரும் கலந்து கொண்டனர். நுவரெலியா மாநகர சபை முதல்வர் சந்தனலால் கருனாரத்ன தேசிய கொடியை ஏற்றி வைத்து நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார். ஒவ்வொரு வருடமும் வசந்த கால நிகழ்வுகள் பாடசாலை மாணவர்களின் பேண்ட் வாத்திய அணிவகுப்புகளுடன் ஆரம்பமாவதைப் போன்றே இந்த வருட நிகழ்வுகளும் ஆரம்பமாகியது.

இதே வேளை நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக நுவரெலியா தனியார் போக்குவரத்து சங்கம் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலைமையில் வசந்தகால நிகழ்வுகளை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையுடனும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்று கோஷமிட்டவாறு வசந்த கால ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்ற இடத்தை முற்றுகையிட்டனர்.

இதன் காரணமாக வசந்த கால ஆரம்ப நிகழ்வுகளை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாத நிலைமை காரணமாக அனைத்தும் இடைநடுவில் நிறுத்தப்பட்டது.

மேலும் வசந்த கால ஆரம்ப நிகழ்வுகளில் அமைச்சர்களான ஜீவன் தொண்டமான், சீ.பி.இரட்நாயக்க மத்திய மாகாண ஆளுநர் லலித் யு.கமகே ஆகியோரும் கலந்து கொள்வார்கள் என வசந்த கால அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டிருந்த பொழுதும் எந்த ஒரு அமைச்சரும் நிகழ்வுகளில் கலந்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பலாங்கொடை கொவிட் 19 சிகிச்சை பிரிவு விசேட நோயாளர் விடுதியாக மாற்றம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை அரசாங்க வைத்தியசாலையில் இதுவரை இயங்கி வந்த கொவிட் 19 விசேட செயற்பாட்டு பிரிவு நேற்று முதல் நீக்கப்பட்டது.

இப்பிரிவு தற்பொழுது ஆண்களுக்கான விசேட நோயாளர் விடுதியாக மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்தது.

சாதாரண நோயாளர் விடுதியாக நீண்டகாலமாக இயங்கி வந்த விடுதிக் கட்டடம் கொவிட் 19 தொற்று ஏற்பட்டதையடுத்து இந்நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் விசேட செயற்பாட்டுப் பிரிவாக மாற்றப்பட்டதுடன், இதனால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களுக்கு சுமார் இரண்டு வருடகாலமாக சேவையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# நிர்வாகத்துக்கு எதிராக கிறேட்வெஸ்டன் தோட்ட தொழிலாளர்கள் வேலைநிறுத்தப்போராட்டம்



தலவாக்கலை குறூப் நிருபர்

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிறேட்வெஸ்டன் ஸ்கல்பா தோட்ட தொழிலாளர்கள் நிர்வாகத்துக்கு எதிராக நேற்று (1) வெள்ளிக்கிழமை வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஹேலீஸ் பெருந்தோட்ட கம்பனியின் கீழ் இயங்கும் கிறேட்வெஸ்டன் ஸ்கல்பா தோட்டத்தைச் சேர்ந்த 100ற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்துக் எதிராக வேலைநிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தோட்ட தொழிலாளர்களுக்கு தேயிலை கொழுந்து பறிப்பதற்கு தோட்டக்காணிகளை பகிர்ந்தளிப்பதில் அநீதி இழைக்கப்படுவதாகவும், குற்றச்சாட்டுகளை தொழிலாளர்கள் முன்வைக்கின்றனர். எனவே இப்பிரச்சினைக்கு உடனடி தீர்வை வலியுறுத்தி வேலை நிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. வாசகங்கள் எழுதிய சுலோக அட்டைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# டிக்கோயா ஒட்டரி தமிழ் வித்தியாலயத்தில் சிறந்த பெறுபேறு

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்



ஹற்றன் கல்வி வலயம் டிக்கோயா ஒட்டரி தமிழ் வித்தியாலயத்தில் 2021 ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் மூன்று மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர். மகேந்திரராஜ் சமிக்ஷா 157, கிருஸ்ணகுமார் ருவேதிதா 152, என்டனி ஜூட் மானக்ஷா 150 புள்ளிகளை பெற்று சித்தி பெற்றுள்ளதாக அதிபர் மதியழகன் தெரிவித்தார்.

வகுப்பாசிரியை எஸ்.சிவனேஸ்வரி மற்றும் சித்திபெற்ற மாணவர்களையும் படத்தில் காணலாம்.

# வீடொன்றில் தீ பரவல்

லுணுகல நிருபர்

பதுளை பசறை பிரதான வீதி பதுள்ளஸ்ரீகம பகுதி வீடொன்றில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

நேற்று காலை (01) 7.00 மணியளவில் வீடொன்றின் அறையில் தீப்பற்றியுள்ளது. வாடகை முறையில் உணவு பரிமாறும் பொருட்களை பகிர்ந்தளிக்கின்ற வீட்டின் அறையில் பெறுமதியான சமையல் உபகரணங்கள், உணவு பாத்திரங்கள், சமையல் எரிவாயு போன்றன தீக்கிரையாகியுள்ளது.

## அடிப்படைவாதிகளால்..

பகுதிக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த குழுவினருக்கு இடையில் ஒழுங்கமைக்கப்பட்ட அடிப்படைவாதிகள் குழுவொன்று வன்முறைச் சூழலை ஏற்படுத்தியமை தெரியவந்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

இரும்பு ஆயுதங்கள் மற்றும் பொல்லுகளுடன் ஆயுதம் ஏந்திய குழுவினர், ஆர்ப்பாட்டக்காரர்களைத் தூண்டிவிட்டு, மிரிஹான பங்கிரிவத்தையில் உள்ள ஜனாதிபதியின் இல்லத்தை நோக்கி பேரணியாகச் சென்று கலவரத்தை ஏற்படுத்தியதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறையில் ஈடுபட்டவர்களில் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் ஒழுங்கமைக்கப்பட்ட அடிப்படைவாதிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் அரபு வசந்தத்தை உருவாக்குவோம் என கோஷமிட்டு அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கலவரக்காரர்கள் திட்டமிட்ட வகையில் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி மக்களைத் தூண்டிவிட்டு நாட்டில் அராஜகத்தை ஏற்படுத்தியுள்ளமை கைது செய்யப்பட்ட நபர்கள் மூலம் தெரியவந்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டிற்கு செல்லும் நுகேகொட, மிரிஹான – பெங்கிரிவத்தை பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை (31) இரவு 7.30 மணியளவில் பொது மக்கள் ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டனர்.

நாட்டில் நிலவும் பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு கோரியும் குறித்த பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணுமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்து ஆர்ப்பாட்டத்தை நள்ளிரவு வரை தொடர்ந்த நிலையில், ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்த கலகமடக்கும் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குறித்த பகுதிக்கு வரவழைக்கப்பட்டனர்.

இதன்பின்னர், நேற்று அதிகாலை 12.45 மணிக்கு உடன் அமுலாகும் வகையில் கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு, மத்திய கொழும்பு, நுகேகொட, களனி மற்றும் கல்கிசை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு நேற்று காலை 5 மணியுடன் தளர்த்தப்பட்டது.

இந்நிலையில் மிரிஹான பகுதியில் ஜனாதிபதியின் இல்லத்திற்கு அருகில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. பொலிஸ், இராணுவம், விசேட அதிரடிப்படையினர் தொடர்ந்தும் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதையடுத்தே நுகேகொடையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் திட்டமிடப்பட்ட அடிப்படைவாதிகளால் மேற்கொள்ளப்பட்டது என்பது தெரியவந்துள்ளது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனநாயகத்தை மீறினால்...

மாநாட்டில் விளக்கமளிக்கும் போதே அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல இவ்வாறு தெரிவித்தார். அதுதொடர்பில் மேலும் விளக்கமளித்த அமைச்சர்,

கடந்த 2019 ஆம் ஆண்டிலிருந்து ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக அரசாங்கம் தொடர்ச்சியாக உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. சில சந்தர்ப்பங்களில் ஜனாதிபதிக்கு சேறு பூசும் வகையில் பிரசாரங்களும் அரசாங்கத்தை கடுமையாக எதிர்க்கும் வகையிலான செயற்பாடுகளும் இடம்பெற்றுள்ளன. எனினும் முதல் தடவையாக நேற்று முன்தினமே ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஹம்பாந்தோட்டையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, பாதுகாப்பு வேலியில் தடுப்பு ஒன்றை சேதப்படுத்திய குற்றத்திற்காக எமது தரப்பினர் கைதுசெய்யப்பட்டனர். ஜனாதிபதியின் இல்லத்தின் மீது நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அரசியல் அடிப்படைவாதிகளால் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது பாரிய சேதங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதுதொடர்பில் உரிய நடவடிக்கையெடுப்பது அவசியம். அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஜனாதிபதியினதும் நாட்டு மக்களினதும் உயிர்ப் பாதுகாப்புக்கு அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும். அந்த வகையில் ஜனாதிபதியின் இல்லத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மிக உக்கிரமான ஒரு சம்பவமே. ஜனாதிபதியையும் தேசிய சொத்துக்களையும் பாதுகாப்பதற்காகவே படையினரும் பொலிஸாரும் செயற்பட்டுள்ளனர். ஜனாதிபதியின் இல்லத்திற்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரவேசிக்க முற்பட்டபோது தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிரபாகரனின் காலத்தைப்போன்று நாட்டில் மீண்டும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு இடமளிக்க முடியாது. ஆர்ப்பாட்டங்களை எப்படியும் செய்யலாம் என்பது தவறு. முழு நாட்டையும் வீழ்ச்சிக்குள்ளாக்கும் வகையில் அரசியல் அடிப்படைவாதிகளால் இந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜனநாயகத்தை தீ வைத்து சீர்குலைத்துவிட முடியாது.

நாட்டில் மக்களுக்கு பல பிரச்சினைகளுள்ளன. அதனை நாம் இரகசியமாக வைக்க விரும்பவில்லை. பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஒரு முறைமையுள்ளது. ஜனநாயக ரீதியில் அது முன்னெடுக்கப்பட வேண்டும். அதனை மீறிச் செயற்பட்டால் அதற்கெதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ)

## அரசியல் அடிப்படைவாதிகளால்...

ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதென தெரிவித்த அவர், சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கையெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்த சம்பவத்தின் போது, இறுதிவரை ஜனாதிபதி பொறுமையைக் கடைப்பிடித்துள்ளாரென தெரிவித்த அமைச்சர், குழப்ப நிலை கட்டுக்கடங்காமல் போகவே ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காக படையினர் நடவடிக்கைகளை மேற்கொள்ள நேர்ந்ததென்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் விளக்கமளிக்கும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

அதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வது இயல்பானது. அத்தகைய ஆர்ப்பாட்டங்கள் நன்மை பயப்பனவாக அமையவேண்டுமே தவிர வன்முறையாகவோ தேசிய சொத்துக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலோ மேற்கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறுகிய அரசியல் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக சில அடிப்படைவாத சக்திகளால் மேற்கொள்ளப்பட்டது. மக்களை பகடைக் காய்களாக பாவித்து அடிப்படை அரசியல்வாதிகள் தமது நோக்கங்களை இதன் மூலம் நிறைவேற்றிக் கொள்ள முடிந்ததையே காணமுடிந்தது.

நாட்டு மக்களுக்கு பிரச்சினைகளுள்ளன என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். நாட்டில் எரிபொருள், சமையல் எரிவாயு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான நெருக்கடி நிலை காணப்படுகிறது. எனினும் இவ்வாறான மோசமான செயற்பாடுகள் மூலம் அதனைப் பெற்றுக்கொள்ள முடியாது. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கன்றி அவர்களது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளவே சில தரப்பினர் செயற்பட்டனர் என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

நேற்றைய இந்த மோசமான நடவடிக்கைகளை மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் வேட்பாளர் ஒருவர் உட்பட அவர்களது ஆதரவாளர்கள் ஈடுபட்டுள்ளனர். உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்திலும் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தேசியப் பட்டியல் உறுப்பினரொருவரும் சம்பந்தப்பட்டிருந்ததைக் குறிப்பிடமுடியும். 88, 89 காலகட்டங்களிலும் அவர்கள் அரசியல் நோக்கங்களுக்காக தேசிய வளங்களுக்கு சேதம் விளைவிப்பதையே கொள்கையாகக் கொண்டு செயற்பட்டனர்.

இந்த மோசமான சம்பவத்தின் போதும் ஜனாதிபதி இறுதிவரை பொறுமை காத்துள்ளார். ஆர்ப்பாட்டக்காரர்கள் பல வாகனங்களுக்கு சேதமேற்படுத்தி வீட்டுக்கும் சேதம் ஏற்படுத்த முனைந்தபோதே பொலிஸாரும் இராணுவத்தினரும் அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட நேர்ந்தது. ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டன. ஆர்ப்பாட்டக்காரர்களைஅங்கிருந்து கலைக்கும் வகையிலேயே கண்ணீர் புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அமைதியாக ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் அடிப்படைவாதிகளின் தலையீட்டால் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த வன்முறைகளின் பின்னணியில் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டுள்ளார்கள். இத்தகைய அடிப்படைவாதிகளை நாம் எந்தவித இன, மத சமூகத்தோடும் ஒப்பிட்டுக்கூறவில்லை. இவ்வாறான வன்முறைகளை நடத்தி சிலரது சடலங்களை பார்ப்பதே அவர்களின் நோக்கமாகும். சம்பவம் நடந்தபோது ஜனாதிபதி வீட்டுக்குள்ளேயே இருந்துள்ளார். இறுதிவரை அவர் பொறுமை காத்துள்ளார். ஜனநாயகத்துக்கும் ஜனநாயகத்தின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ள ஜனாதிபதி மீது பாதிப்பு ஏற்படும் போது இராணுவத்தினர் வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இறுதிச் சந்தர்ப்பத்திலேயே அவர்கள் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனரென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ)

## 39 மில். ரூபா சொத்துக்களுக்கு...

39 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பீட்டில் தெரியவந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்த சம்பவம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் அறிக்கையிடுவதற்கு தடைவிதிக்க முடியாதென தெரிவித்துள்ள அவர், தாக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்கள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் நேற்றைய தினம் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் விளக்கமளிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

மிரிஹானையிலுள்ள ஜனாதிபதியின் இல்லத்தின் மீது ஆர்ப்பாட்டக்காரர்களால் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவு, குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களம் மற்றும் மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கும் வகையில் மூன்று விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

குற்றமிழைத்துள்ளவர்களுக்கு எதிராக நடைமுறையிலுள்ள சாதாரண சட்டத்தின் படியே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த சம்பவம் தொடர்பில் செய்திகளை அறிக்கையிடுவதற்கு ஊடகவியலாளர்களுக்கு தடை விதிக்கப்படவில்லை. அத்துடன் தாக்குதலுக்குள்ளாகியுள்ள ஊடகவியலாளர்கள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

இந்த சம்பவத்தில் பொலிஸ் பஸ் ஒன்றும் பொலிஸ் ஜீப் வண்டி ஒன்றும் இரண்டு பொலிஸ் மோட்டார் சைக்கிள்களும் சேதப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் இரண்டு பொலிஸ் வாகனங்களுக்கும் விசேட செயலணியின் இரண்டு பஸ்கள் உட்பட அரசாங்க சொத்துக்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இச் சம்பவத்தில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் உட்பட 24 பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயங்களுக்குள்ளாகியுள்ளதுடன் அவர்களில் 18 பேர் விசேட செயலணி அதிகாரிகளாவர். காயமடைந்துள்ள 09 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் குழுக்கள் தமது விசாரணை நடவடிக்கைகளை நேற்று ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## தீர்வை பெற ...

ஜனாதிபதியின் இல்லம் முற்றுகையிடப்பட்டமை தொடர்பாக நேற்று ஊரெழுவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பில் நேற்று ஒரு சில அசாதாரண சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மிகப்பெரிய சவாலான நிலைமை இன்று இலங்கையில் ஏற்பட்டிருக்கின்றது. விலைவாசிகள் உயர்ந்துள்ளன. எரிபொருளுக்கு தட்டுப்பாடு, மின்சாரம் இல்லை, வாழ்வாதாரம் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இது மக்களின் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கின்றது. இயல்பு வாழ்க்கைக்கு பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இது மிகவும் கஷ்டமான விடயம்.

ஆனாலும் யாழ் மாவட்ட மக்களை பொறுத்தவரை இது புதிதல்ல. இது தெற்கு மக்களுக்கு புதியதொரு சம்பவமாகவே இருக்கும். நேற்று அதற்காக ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்று அது வன்முறையாக மாறி இருக்கின்றது.

கடந்த காலத்தில் நாங்கள் வன்முறையில் இருந்து வந்த மக்கள் மீண்டும் அதனை நோக்கிப் போக கூடாது என்பது என்னுடைய விருப்பம். மக்களுடைய போராட்டத்தின் வேதனையை உணரக் கூடியதாக இருக்கின்றது. போராட்டத்தை அமைதியாக செய்ய வேண்டும். வன்முறை இல்லாமல் போராட்டங்களை செய்து தீர்வை நோக்கி செல்ல முடியும். எந்த அரசிடமும் எந்த தலைவரிடமும் உடனடி தீர்வு இல்லை. தற்போதுள்ள சிக்கலுக்குள் தீர்வு பெற வேண்டுமாக இருந்தால் நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து எங்களால் முடிந்த ஆலோசனைகளை முயற்சிகளை வழங்கி ஒரு தீர்வை காண வேண்டுமே தவிர வன்முறை ஒரு போதும் தீர்வாகாது.

யாருக்கும் வக்காளத்து வாங்க வேண்டிய அவசியம் இல்லை. யாருடைய உதவியாலும் மக்களால் நான் தெரிவு செய்யப்படவில்லை. மக்களால் மட்டுமே நான் தெரிவு செய்யப்பட்டேன். எந்த ஒரு அரசாங்கத்திற்கும் தலைவருக்கு வக்காளத்து வாங்குவது எனது நோக்கமல்ல. தற்போதுள்ள பிரச்சினையை தீர்ப்பதற்கு என்னால் முடிந்த அனைத்து ஒத்துழைப்புகளையும் நான் செய்யத் தயாராக இருக்கிறேன் என்றார்.


CDU/TS/2022/05&06

### இலங்கைச் சுங்கம்

### அரசுரிமையாக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கான கேள்வி

அரசுரிமையாக்கப்பட்ட வாகனங்கள், தங்கம் / வெள்ளி ஆபரணங்கள் / மின்சாரம் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் ஏனைய நானாவிதப் பொருட்களை கேள்வி மூலம் விற்பனை செய்வற்கான கேள்வி கோரல் 2022-04-07ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இலங்கைச் சுங்கம், மத்திய அப்புறப்படுத்தல் இயக்குணரகத்தில் இடம்பெறும்.

இந்தப் பொருட்களின் பட்டியல் மற்றும் இதன் விபரங்கள் அடங்கிய படிவமொன்றை மீளளிக்கப்படாத 25.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி இலங்கைச் சுங்கத்தின் 3ஆம் மாடியில் உள்ள மத்திய அப்புறப்படுத்தல் இயக்குணரகத்தில் 2022 ஏப்ரல் மாதம் 04, 05 மற்றும் 06 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விற்பனைக்குள்ள பொருட்களின் பட்டியல் www.customs.gov.lk எனும் சுங்கத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் 2022 ஏப்ரல் மாதம் 01ஆம் திகதியிலிருந்து காட்சிப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு பின்வரும் எண்களுடன் தொடர்புகொள்ளவும்:

011-2430795
011-2143434 - நீடிப்பு 7300

**சுங்கப் பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கைச் சுங்கம்,**
**சுங்க இல்லம்,**
**இல. 40, பிரதான வீதி,**
**கொழும்பு-11.**



### பெறுகை அறிவித்தல்

(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில், மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

### பன்னல அஸ்போல்ட் உற்பத்தியகத்திற்குத் தேவையான கருங்கல் வகைகளை வழங்குவதற்காக கேள்வி கோரல்

இந்த அதிகார சபையின் பன்னல அஸ்போல்ட் உற்பத்தியகத்திற்குத் தேவையான கருங்கல் வகைகளை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

பின்வரும் கேள்விச் சுருக்கத்தில் காட்டப்பட்டுள்ள வகையில் படிவத் தொகுதியைக் கொள்வனவு செய்தல் வேண்டும்.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரங்கள் | வழங்கல் அளவு கியூப் மீற்றர் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் தவிர) | கேள்விப் பிணையின் பெறுமதி ரூபா | | கேள்விப் படிவங்கள் வழங்குதல் |
|---|---|---|---|---|---|---|
| | | | | பணமாக | வங்கிப் பிணை மூலம் | |
| PRDA/WP/PRO/2022/16 | 00-5 மி.மீ. கருங்கல் | 3750 | 2000.00 + வெட் வரி | 171,500.00 | 343,000.00 | 2022-04-04 - 2022-04-08ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை |
| | 05-12 மி.மீ. கருங்கல் | 2250 | | | | |
| | 12-20 மி.மீ. கருங்கல் | 1725 | | | | |
| | 2022-04-11ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். | | | | | |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணங்களை மேற்குறிப்பிடப்பட்ட கேள்விப் படிவக் கட்டணத்தைச் செலுத்தி இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை ரொக்கப் பணமாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்குறிப்பிடப்பட்ட பெறுமதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கருங்கற்களுக்கான கேள்வியை வழங்குப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு 5.0 மில்லியன் ரூபாவை விஞ்சும் கேள்வித் தொகைக்கு கேள்விதாரரினால் 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்படும் பொது ஒப்பந்தங்கள் பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. மேற்குறிப்பிடப்பட்ட வகையில் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**

**தொ. இலக்கம் 011-5676903**



### பெருந்தோட்ட அமைச்சு

### இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

### பச்சைத் தேயிலைக் கொழுந்தை கேள்வி முறையின் கீழ் விற்பனை செய்தல்

ஜனவரி/ பெப்ரவரி / 2022

**கேள்வி இல. SLSPC/PL/Green Leaf/May/June/T-85/2022**

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கண்டி / மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ள பின்வரும் தோட்டங்களில் 2022-05-01ஆம் திகதி முதல் 2022-06-30ஆம் திகதி வரையான (மே / ஜூன்) காலத்திற்கு இயைபான பச்சைத் தேயிலைக் கொழுந்தை விற்பனை செய்வதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தோட்டத்தின் பெயர் | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை |
|---|---|---|
| அலகொல்ல அரச தோட்டம் | 5000.00 | 100,000.00 |
| கொட்டகஹ அரச தோட்டம் | 5000.00 | 100,000.00 |
| கல்பிஹில்ல அரச தோட்டம் | 5000.00 | 100,000.00 |
| கோமர அரச தோட்டம் | 5000.00 | 100,000.00 |
| ஹாகல அரச தோட்டம் | 5000.00 | 100,000.00 |
| கெலேபொக்க அரச தோட்டம் | 5000.00 | 100,000.00 |
| கெலேபொக்க அரச தோட்டம் (Out grower leaf) | 5000.00 | 100,000.00 |
| வுட்சைட் அரச தோட்டம் | 5000.00 | 50,000.00 |
| ஹுன்னஸ்கிரிய அரச தோட்டம் | 5000.00 | 100,000.00 |
| வைத்தலாவ அரச தோட்டம் | 5000.00 | 100,000.00 |
| ஹெயார்பார்க் அரச தோட்டம் | 5000.00 | 100,000.00 |

மேற்படி விலைக்கோரலுக்கான நிபந்தனைகள் மற்றும் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான படிவங்களை உள்ளடக்கிய கேள்வி ஆவணங்களை 5000.00 ரூபாவைச் செலுத்தி 2022-04-05ஆம் திகதி முதல் கொழும்பில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் மற்றும் பன்வில, கல்பிஹில்லயில் அமைந்துள்ள எமது பிரதேச அலுவலகத்திலிருந்து 2022-04-08ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

வைப்புத் தொகையாக வைப்புச் செய்ய வேண்டிய ஒரு இலட்சம் ரூபாவை (100,000.00) ஒவ்வொரு தோட்டத்திற்காகவும் வெவ்வேறாகச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கி முதலாம் நகரக் கிளையில் பேணப்படும் 046 1002 40000 933 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து அல்லது ரொக்கப் பணமாக காசாளருக்குச் செலுத்தி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் பற்றுச்சீட்டின் பிரதியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை / விண்ணப்பங்களை தலைவர், பெறுகைக் குழு, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், இல. 21, பீசீசீ வளவு, மீராணியா வீதி, கொழும்பு-12 எனும் முகவரிக்கு அல்லது அந்த முகவரியில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022-04-26ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு முன் உள்ளிடுதல் வேண்டும். 2022-04-26ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு இந்தக் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்வியைச் சமர்ப்பித்த கொள்வனவாளர் அல்லது அவர்களின் பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

நிர்ணயிக்கப்பட்ட தினம் மற்றும் நேரத்திற்குக் கிடைக்கப்பெறாத மற்றும் முழுமையற்ற கேள்விகளை உள்ளடக்கிய படிவம்/ விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதுடன் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுத் தலைவரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 21, பீசீசீ வளவு, மீராணியா வீதி, கொழும்பு-12.**
**விசாரணை: தொ.பே. 011-5921463**

2022-03-31

# தொடர் தோல்விகளுக்கு பின்னர் வெற்றி இலக்கை தொட்ட தொழிலதிபர்



கொரோனா தொற்றுக் காலத்தில் சுகாதார நடைமுறைகளைப் பேணி நான்கு நட்சத்திர ஹோட்டலை சீரான முறையில் செயற்படுத்தலுக்கான 2020 ஆம் ஆண்டு மத்திய மாகாண ஆளுநர் விருது....

2021 ஆம் ஆண்டு ஆசியாவின் சிறந்த ஹோட்டல் சேவைக்கான விருது, இந்தியாவில் இடம்பெறும் நிகழ்வில் வழங்கப்படவுள்ளது...

**கொரோனா தொற்றுக் காலத்தில் சுகாதார நடைமுறைகளைப் பேணி நான்கு நட்சத்திர ஹோட்டலை சீரான முறையில் செயற்படுத்தினார் என்ற வகையில் தொழிலதிபரும் சமூக செயற்பாட்டாளருமான**

**அ. சிவசுப்பிரமணியத்திற்கு**

**2020 ஆம் ஆண்டு மத்திய மாகாண ஆளுநர் விருது வழங்கப்பட்டது. அதேவேளை 2021 ஆம் ஆண்டு ஆசியாவின் சிறந்த ஹோட்டல் சேவைக்கான விருது இந்தியாவில் இடம்பெறும் நிகழ்வில் இவருக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. சமூக சிவில் அமைப்புக்களில் பல்வேறு விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றவர். இவர் கண்டியில் ஆர். டி. ஒயில் கடை நிறுவனத்தின் பிரதான பங்காளரும் ஆவார்.**

**அவருடனான ஒரு கலந்துரையாடல்,...**

**உங்களது ஆரம்ப காலம் பற்றிக் கூறுவீர்களா?**

நான் கண்டி குண்டசாலையில் வாழ்ந்தாலும் 1967 இல் பண்டாரவளை தோட்டத்தில் பிறந்தேன். தந்தை ஒரு வர்த்தகர்.03 சகோதரிகள் மற்றும் 02 சகோதரர்கள் என மொத்தம் 5 உடன் பிறப்புகள்.

1986 இல் நான் க. பொ. த சாதாரண தரம் வரை மட்டும் படித்தேன். அதன் பின்னர் தந்தையின் கடையில் முழுமையாக இணைந்து கொண்டேன். நான் தந்தையின் கடையில் இருந்தவாறு முதல் வியாபாரத்தை ஆரம்பித்தேன். 19 வயதில் நான் நண்பர்களுடன் சேர்ந்து முதன் முதலாக ஒரு இடை வியாபாரத்தை செய்தேன். நான் நண்பர்களுடன் சேர்ந்து வேறு தொழில் முயற்சிகளையும் செய்தேன்.

**உங்கள் வாழ்க்கையில் திருப்பமுனையை ஏற்பத்திய நிகழ்வு என்ன?**

தோல்விகளுக்கு மேல் தோல்விகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் போது இக்கால கட்டத்திலேயே என்னுடைய மூத்த சகோதரியின் கணவரான மைத்துனர் எஸ். சிவராஜின் பரிந்துரைக்கு இணங்க அவரின் தம்பியான பி. பழனியப்பனின் கடையில் வேலை வாய்ப்பு கிடைக்கப் பெற்றேன். கண்டியில் என் மைத்துனரின் கடையான ரஞ்சிதா ட்ரேடர்ஸ் கடைக்கு வரும் போது எனக்கு 25 வயது ஆகும். அந்த நேரத்தில் என் கையில் 2 ரூபாய் மட்டுமே இருந்தது. நான் சில கடன்களை செலுத்த வேண்டியிருந்தமையால் முதல் 3 வருடங்கள் மிகக் கடுமையாக உழைத்தேன்.

நான் ஒரு புதிய உடைகள் கூட வாங்குவதில்லை. ஆனால் என் மைத்துனர் தேவையான போதெல்லாம் பணம் தருவார். அவை மட்டுமல்ல என்னுடைய 3 வருட தினசரி கடின உழைப்பைப் பார்த்து என் மைத்துனர் என்




கடன்களை அடைப்பதற்கு என உதவி செய்தார்.

எனவே நான் தொழிலில் ஓய்வின்றி கடுமையாக உழைத்தேன். குறிப்பிட்ட காலத்தில் கடன்களை அடைத்தேன். 10 ஆண்டுகளுக்குப் பின் என்னுடைய 35 வயதிலேயே என்னுடைய மைத்துனர் ஆர். டி ஒயில் ஸ்டோர்ஸ் எனும் புதிய நிறுவனத்தை ஆரம்பித்து அதில் என்னை நிர்வாகியாக்கினார்.



அதேவேளையில் ஆர். டி. ஒயில் மார்க்கடின் நிறுவனத்தை தொடங்கினேன்.2015 ஆம் ஆண்டில், சஹானா எண்டர்பிரைசஸ் என்ற பெயரில் ஒரு புதிய பலசரக்கு உணவுப் பொருட்கள் இறக்குமதி நிறுவனத்தைத் தொடங்கினேன். இவையே எனக்கு கிடைத்த ஒரு பெரிய வெற்றியாகும்.

**தனக்கென சில கொள்கை வகுத்துக் கொண்டு அந்தக் கொள்கைகளில் தளராமல் நம்பிக்கை வைத்து செல்பவர்கள் மட்டுமே உயரிய வெற்றி இலக்குகளை அடைய முடியும். அந்த வகையில் நீங்கள் பல தோல்விகளையே வெற்றிகளாக மாற்றி முன்னோக்கி பயணத்திற் கொண்டு இருக்கின்றீர்கள். இது குறித்து...**

2018 ஒரு புதிய தொழிலை விரும்பி ஹோட்டல் தொழிலைத் தேர்ந்தெடுத்தேன். கண்டியில் (அரங்கலா) நான்கு நட்சத்திர ரிசார்ட் ஹோட்டலைக் கட்டினேன். ஒரு புதிய வர்த்தகம். ஒரு பெரிய தொகை முதலீடு செய்தேன். அதுவும் மிகவும் வெற்றிகரமாக அமைந்தது.

என்னுடைய வாழ்க்கை முறையில் நான் அதிகளவு வணிகத் துறையில் தோல்விகளைக் கண்ட பின்னர்தான் வெற்றி இலக்குகளை அடைந்து கொண்டேன் என்று தெளிவாகச் சொல்லலாம்.

**உங்களுடைய சமூகச் செயற்பாடுகள் பற்றி?**

முதன்முதலாக கண்டியிலுள்ள தமிழ் வர்த்தக சங்கத்தின் ஊடாகத் தான் என்னுடைய சமூக செயற்பாட்டுக்கான ஒத்துழைப்பை வழங்கி வந்தேன். அதனைத் தொடர்ந்து சமய கலாசார நிகழ்வுகளாக இருந்தாலும் சரி, மலையகத்திலுள்ள வறிய மாணவர்களுடைய கல்வி மேம்பாடுகளுக்காக இருந்தாலும் சரி, கோயில் கும்பாவிஷேகம், கட்டிட நிர்மாணப் பணிகளாக இருந்தாலும் சரி, உடனடி மருத்துவ சேவைகள் அனர்த்தங்கள் போன்ற எல்லா மனிதாபிமான உதவிகளிலும் என்னுடைய ஒரு பங்களிப்பும் நல்லாதரவும் உதவியும் என்றும் இருக்கும்.

மனிதன் தான் தேடிய செல்வங்களைத் தன் தேவைக்கு மேல் உள்ள பொருட்களை தருமம் செய்து அடுத்தவருடைய மனிதனின் வாழ்விலும் ஒளிவீச வேண்டும். அதுவே என்னுடைய எதிர்பார்ப்பு ஆகும்.

**புதிய தொழில் முயற்சியாளர்களுக்கு ஏனைய தொழில் தருனர்களுக்கு உங்கள் கருத்து**

தன்னம்பிக்கையுடன் கூடிய விடா முயற்சி மற்றும் தீவிர உழைப்பு இருந்தால் அதிஷ்டமும் அரவணைத்துக் கொள்ளும். வியாபாரத்தையும் முதலீட்டையும் குறுகிய வட்டத்தின் உள்ளே சிந்திக்காது பறந்து சிந்திக்க பழகிக் கொள்ள வேண்டும்.

அதேபோன்று என் தொழில் வெற்றிக்கு வித்திட்டு என்னை விருட்சம் போல வளரவைத்த எனது மைத்துனர்களான சிவராஜ் மற்றும் பழனியப்பன் ஆகிய இருவரும் எனக்கு கற்றத் தந்த பாடங்கள் அதிகம். இந்த சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

ஜீவராஜ்

## அடிப்படைவாத ... (03ஆம் பக்கத் தொடர்)

அல் குர்ஆன் வசனங்களுக்கு சரியான விளக்கத்தை வழங்காமையே இதற்கு ஒரு காரணமென ஜனாதிபதி செயலணி உறுப்பினர் மொஹமட் மௌலவி தெரிவித்துள்ளார். இந்த பிழையை உடனடியாக சரி செய்து, நாட்டுக்கும் குழந்தைகளுக்கும் ஏற்ற பாடத்திட்டத்தை உடனடியாக தயாரிக்க வேண்டும் என்று செயலணியை பிரதிநிதித்துவப்படுத்தும் மிதவாத முஸ்லிம் சிந்தனைவாதிகள் தெரிவித்துள்ளனர்.

பாடப் புத்தகங்கள் மற்றும் ஆசிரியர் கையேடுகளில் உள்ள அனைத்து அடிப்படைவாத போதனைகளையும் கண்டறிந்து, ஆவணப்படுத்தி, கல்வி அமைச்சிடம் சமர்ப்பிக்குமாறு கல்விச் செயலாளர்களின் கோரிக்கையை ஒரே நாடு, ஒரே சட்டத்துக்கான ஜனாதிபதி செயலணி ஏற்றுக்கொண்டது.

செயலணியின் கல்வி உபகுழுவானது ஆய்வு செய்து, பாடநூல்களைத் திருத்துவதற்கும் அடிப்படைவாதப் போதனைகள் பாடசாலைப் பாடத் திட்டத்தில் நுழைவதைத் தடுப்பதற்கும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து ஏப்ரல் 07ஆம் திகதி கல்வி அமைச்சுக்கு பரிந்துரைகளை சமர்ப்பிக்க உள்ளது.

இலங்கையில் “ஒரே நாடு ஒரே சட்டம்” என்ற கருத்தியலை நடைமுறைப்படுத்துவது தொடர்பில், பல்வேறு தரப்பினரின் கருத்துக்கள் மற்றும் எண்ணங்களை கருத்திற்கொண்டு, அந்தக் கருத்தியலை ஆய்வு செய்ததன் பின்னர், நாட்டில் அதனை அமுல்படுத்துவது தொடர்பான கருத்தியல் பத்திரத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் சமர்ப்பிக்க, வண.கலகொட அத்தே ஞானசார தேரரின் தலைமையில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணி, இதுவரை நாட்டின் பல்வேறு மாகாணங்கள் மற்றும் நிறுவனங்களை உள்ளடக்கிய வகையில் பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டறிதல் மற்றும் நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்று வருகின்றது.

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் பி.என். அயிலப்பெரும உள்ளிட்ட அதிகாரிகள் பலர் இதில் கலந்துகொண்டனர்.

“ஒரே நாடு ஒரே சட்டத்துக்கான” ஜனாதிபதி செயலணியின் தலைவர் ராஜகீய பண்டித்த வண. கலகொட அத்தே ஞானசார தேரர், உறுப்பினர்களான மொஹமட் மௌலவி, அசீஸ் நிசார்தீன், பேராசிரியர் சாந்தி நந்தன செனவிரத்ன, வைத்தியர் சுஜீவ பண்டித்தரத்ன, சிரேஷ்ட விரிவுரையாளர் சுமேத வீரவர்தன, சட்டத்தரணி சஞ்ஜய மாரம்பே, சட்டத்தரணி இரேஷ் செனவிரத்ன, எரந்த நவரத்ன, பாணி வேவல ஆகியோருடன் அதன் செயலாளர் செல்வி ஜீவந்தி சேனாநாயக்க மற்றும் அச் செயலணியின் கல்வி உப குழுவின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

## ஆர்ப்பாட்டக்காரர்களுடன்... (03ஆம் பக்கத் தொடர்)

அவர்கள் ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்துள்ளனர். ஆர்ப்பாட்டம் ஜனாதிபதியின் இல்லத்தை நெருங்கிய போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் என்ற போர்வையில் ஜே.பி.வி உட்பட சில அடிப்படைவாத கும்பல்களும் அதில் இணைந்துகொண்டுள்ளன. ஆர்ப்பாட்டம் உக்கிரமடைந்த போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் இறுதி சோதனைச் சாவடியையும் உடைத்துக்கொண்டு ஜனாதிபதியின் இல்லத்துக்குள் பிரவேசிக்க முனைந்தபோதே ஜனாதிபதி பணிப்புரைக்கமைய படையினர் அதனைத் தடுப்பதற்காக கண்ணீர்புகை பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். படையினரால் ஜனாதிபதியைப் பாதுகாப்பதற்காக உச்சளவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பெருந்தொகையானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோதும் 54 பேர் மட்டுமே கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கைதுசெய்யப்பட்டதற்கான காரணம் தொடர்பிலும் ஊடகவியலாளர் இதன் போது எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், மேலும் சிலரும் கைதுசெய்யப்படலாம். பாதுகாப்பு படையினரால் கலகங்களில் ஈடுபட்டுள்ளவர்களென இனங்காணப்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதுதொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அரச வளங்களை சேதப்படுத்துவது அடிப்படைவாத அல்லது பயங்கரவாத செயலாகும்.

இதுபோன்றே 88, 90 காலப் பகுதிகளிலும் இடம்பெற்றுள்ளன. இப்போதும் அதற்கான அடித்தளமே இடப்படுகின்றது. அதற்கு இடமளிக்க முடியாதென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ)

## இலங்கை நேபாள... (03ஆம் பக்கத் தொடர்)

முனைவோர்களின் வழக்கமான உயர்மட்டப் பரிமாற்றங்களின் முக்கியத்துவத்தையும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் எடுத்துரைத்தார். இருதரப்பு நலன்கள் மற்றும் அரசியல், பொருளாதாரம், கல்வி மற்றும் கலாசாரத் துறைகளில் நடைபெற்று வரும் திட்டங்களை மீளாய்வு செய்வதற்கான கட்டமைக்கப்பட்ட தளத்தை வழங்கும் இலங்கைக்கும் நேபாளத்துக்கும் இடையிலான கூட்டு ஆணைக்குழுவின் ஆரம்ப அமர்வை 2022 மே 30 மற்றும் 31ஆம் திகதிகளில் கொழும்பில் கூட்டுவதற்கு இரு வெளியுறவு அமைச்சர்களும் ஒப்புக்கொண்டனர்.

பௌத்தம் ஒருவருக்கொருவர் நல்லெண்ண உணர்வைத் தூண்டுவதால், லும்பினியை புனித யாத்திரை மற்றும் பௌத்த பாரம்பரிய இடமாக மேம்படுத்துவதில் இலங்கையின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் சுட்டிக் காட்டினார்.



ஏறாவூர் தமிழ்ச்சாரல் கலை இலக்கிய வட்டத்தின் தமிழ்ச்சாரல் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடும், பெண் ஆளுமைகளைக் கௌரவிக்கும் நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை (25 ) ஏறாவூர் கலாசார மத்திய நிலையத்தில் தமிழ்ச்சாரல் கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் எம்.எச். ஜிப்ரி யா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக ஏறாவூர் நகர சபையின் தவிசாளர் எம்.எஸ்.நளீம் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் பதினொரு பெண் கவிஞர்களின் கவிதைகள் அடங்கிய தமிழ்ச்சாரல் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடு செய்யப்பட்டதோடு ஏறாவூரில் உள்ள பல்துறை சார்ந்த பெண் ஆளுமைகள் கௌரவிக்கப்பட்டனர் .

## பாராட்டு விழா

கலாபூஷணம் விருதைப் பெற்றுக் கொண்ட இலங்கை பொன்மனச் செம்மல் பொன் தமிழ் கவிஞர் கலாபூஷணம் எம்.எஸ். தாஜ்மஹானுக்கு அக்ஷரா இசைக் குழுவினர் நடாத்தும் பாராட்டு விழா இன்று (02.04.2022) பி.ப.4.00 மணிக்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் சட்டத்தரணி இலக்கியச் செம்மல் ரஷீத் எம் இம்தியாஸ் தலைமையில் இடம்பெறும்.

## தமிழர் பிரச்னைகளுக்கு...

உரையாடினார். இதன்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார். மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பின்போது, வடக்கு, கிழக்கில் காணிகள் அபகரிப்பு, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரம், அரசியல் கைதிகள் விவகாரம் மற்றும் அபிவிருத்தி என நான்கு விடயங்கள் வலியுறுத்தப்பட்டன. இவை தமிழ் மக்களிடத்தே நீண்டகால மாக இருக்கும் பிரச்னைகளாகும்.

இந்த விடயங்களுக்கு தீர்வு காண முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் நல்லிணக்கம் மற்றம் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு வழிவகுக்கும். ஆனால், இந்த விடயங்கள் முடிவாக அமையாது, அரசியல் தீர்வே முக்கியமானது என்றும் அவர் கூறினார். அத்துடன், “இலங்கை தற்போதைய நெருக்கடியிலிருந்து மீண்டு வர, உரிய காலத்திற்குள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தற்போது காணப்படும் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இலங்கை மந்தகதியிலேயே செயல்படுகிறது என்றும் அவர் கருத்து தெரிவித்தார். அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்காக அண்மையில் பெற்றுக்கொடுக்கப்பட்ட100 கோடி டொலர் இந்திய கடன் வசதியை இந்தியா உடனடியாக செயல்படுத்தும் என்று உறுதியளித்தார். திருகோணமலை எண்ணெய் தாங்கிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் உள் நாட்டு அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமையவே முன்னெடுக்கப்படும் என இந்திய வெளிவிகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சீமெந்தின் ...

விலை 500 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு 1,850 ரூபாவாக இருந்து சீமெந்து பைக்கற்று 2, 350 ரூபாவாக விற்கப்படுகிறது. அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி மற்றும் மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு என்பன, இந்த விலை உயர்வுக்கு காரணமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதாவுத செனவிரத்னவின்... (03ஆம் பக்கத் தொடர்)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராகவும் கேகாலை மாவட்ட அமைப்பாளராகவும் செயற்பட்டார். நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தொழிலாளர் மற்றும் மனிதவள அமைச்சராக அதாவுத செனவிரத்ன உழைக்கும் மக்களுக்கு ஆற்றிய சேவையை நினைவுகூர வேண்டும்.

அரசியலிலிருந்து சற்று விலகியிருந்தாலும், அதாவுத செனவிரத்னவுக்கும் எனக்கும் இடையிலான நட்பு அவர் இறக்கும் வரை தொடர்ந்து இருந்தது. தீவிர அரசியலிலிருந்து ஓய்வு பெற்று நீண்ட காலம் சமூக சேவையில் தொடர்ந்து ஈடுபட்டு வந்த அதாவுத செனவிரத்ன, தனது வாழ்க்கையில் ஒரு பரோபகார அரசியல்வாதியின் பாத்திரத்தை வெளிப்படுத்திய தனித்துவமான ஆளுமை. தனது 91ஆவது வயதில் காலமான அதாவுத செனவிரத்னவின் ஆத்மா சாந்தியடையட்டுமென பிரார்த்திப்பதுடன், அவரது மறைவால் துயருறும் குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் பிரதமர் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## மாணவியை... (03ஆம் பக்கத் தொடர்)

காணாமல் போயுள்ளார். இவர் சுமார் 05 அடி 06 அங்குலம் உயரம் , மாநிறத்தைக் கொண்ட, நீளமான கூந்தலையுடையவரென தெரிவிக்கப்படுகின்றது. இறுதியாக பாடசாலை சீருடையுடனே இருந்துள்ளார். இவர் தொடர்பில் தகவல் அறிந்தோர் 0312222222, 0112436161 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பை ஏற்படுத்தி அறியத்தருமாறு பொலிஸ் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

## இலங்கை அதிகாரிகளுடன் IMF...

இலங்கை அரசாங்கம் தமது அபிலாஷையை வெளிப்படுத்தியுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் கூறியுள்ளார்.

## மிரிஹான ஆர்ப்பாட்டம்;...

உத்தியோகத்தர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும், களுபோவில போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கலகத்தை விளைவித்த தரப்பினர், ஒரு பொலிஸ் பேருந்து, ஒரு பொலிஸ் ஜீப் ரக வண்டி, மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டி, இராணுவ பேருந்து என்பனவற்றை தீ வைத்து சேதமாக்கியதாக தெரிவிக்கப்பட்டது. இதுதவிர, மேலும் சில தனியார் வாகனங்களுக்கும் சேதம் ஏற்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று முதல் மின்துண்டிப்பு..

எதிர்பார்ப்பதாகவும் மின்சார சபைக்கு தொடர்ந்து உலை எண்ணெய் மற்றும் டீசல் விநியோகம் கிடைத்தால், மின்வெட்டை முடிவுக்கு கொண்டு வர முடியும் என்றும் குறிப்பிட்டார்.

## CTB பஸ்கள் சேவையில் எவ்வித...

கொழும்பில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு 1,000 பஸ்கள் சேவையில் உள்ள அதேவேளை பஸ் சேவைகள் குறையவில்லை எனவும் அவர் தெரிவித்தார். சில நிரப்பு நிலையங்களில் போதிய எரிபொருள் விநியோகம் இல்லாத நிலையில், இலங்கை போக்குவரத்து சபையின் களஞ்சியசாலைகளில் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு போதுமான எரிபொருள் இருக்கிறது. எவ்வாறாயினும், தேவை குறைவாக உள்ள சில பகுதிகளில் பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். முன்பதிவு செய்யப்பட்ட எரிபொருள் கையிருப்பு உரிய நேரத்தில் கிடைக்காவிட்டால், சேவையில் ஈடுபடும் பஸ்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டியிருக்கும். பாடசாலை மற்றும் அலுவலக நேரங்களில் பஸ்கள் இயங்குவதை உறுதி செய்ய இலங்கை போக்குவரத்து சபை தன்னால் முடிந்த அளவு முயற்சி செய்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மிரிஹானவிலுள்ள...

பொலிஸ் அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலர் காயமடைந்தனர். பொலிஸ் வாகனங்கள் உட்பட சில வாகனங்கள் தீயிட்டு கொளுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆஸிக்கெதிரான 2ஆவது ஒருநாள் போட்டி பாகிஸ்தான் அணி இலகுவான வெற்றி



அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில், பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 6 விக்கெட்டுகளால் சிறப்பான வெற்றியை பதிவுசெய்துள்ளது.

இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 1-1 என்ற கணக்கில் சமநிலைக்கு கொண்டுவந்துள்ளது.

லாகூர் மைதானத்தில் நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 348 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, பென் மெக்டர்மோட் 104 ஓட்டங்களையும் ட்ராவிஸ் ஹெட் 89 ஓட்டங்களையும் மார்னஸ் லபுஸ்சேகன் 59 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், ஷாயின் அப்ரிடி 4 விக்கெட்டுகளையும் மொஹமட் வாசிம் 2 விக்கெட்டுகளையும் ஸாஹித் மஹ்மூத் மற்றும் குஸ்தீல் ஷா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 349 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, 49 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 6 விக்கெட்டுகளால் சிறப்பான வெற்றியை பதிவுசெய்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, பாபர் அசாம் 114 ஓட்டங்களையும் இமாம் உல் ஹக் 106 ஓட்டங்களையும் பகர் சமான் 67 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், ஆடம் செம்பா 2 விக்கெட்டுகளையும் நாதன் எலீஸ் மற்றும் மார்கஸ் ஸ்டொயினீஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 83 பந்துகளில் ஒரு சிக்ஸர் 11 பவுண்ரிகள் அடங்களாக 114 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட பாபர் அசாம் தெரிவுசெய்யப்பட்டார்.

# இலங்கை அணி பங்களாதேஷ் பயணம் டெஸ்ட் தொடர் அட்டவணை அறிவிப்பு



மே மாதம் பங்களாதேஷிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இலங்கை கிரிக்கெட் அணி, அங்கே இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடவிருக்கின்றது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி. இன்) உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பின் அங்கமாக அமைகின்ற இரண்டு போட்டிகள் கொண்ட இந்த டெஸ்ட் தொடரில் பங்கெடுக்கும் இலங்கை கிரிக்கெட் அணி, மே மாதம் 08ஆம் திகதி பங்களாதேஷ் பயணமாகின்றது. பங்களாதேஷ் பயணமாகிய பின்னர், இலங்கை அணி இரண்டு நாட்கள் கொண்ட பயிற்சிப் போட்டியில் டெஸ்ட் தொடருக்கு முன்னதாக ஆடவுள்ளதுடன், குறித்த பயிற்சிப் போட்டி மே மாதம் 11ஆம் திகதி இடம்பெறுகின்றது.

தொடர்ந்து இரு அணிகளும் பங்கெடுக்கும் டெஸ்ட் தொடரின் முதல் போட்டி மே மாதம் 15ஆம் திகதி சட்டோக்ராம் நகரிலும், இரண்டாவது போட்டி மே மாதம் 23ஆம் திகதி டாக்காவிலும் நடைபெறுகின்றது.

இலங்கை அணி, ஐ.சி.சி. இன் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகள் தரவரிசையில் தற்போது ஐந்தாம் இடத்திலும், பங்களாதேஷ் அணி எட்டாம் இடத்திலும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### போட்டி அட்டவணை

பயிற்சிப் போட்டி – மே மாதம் 11ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரை – சட்டோக்ராம்

முதல் டெஸ்ட் – மே மாதம் 15ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதி வரை – சட்டோக்ராம்

இரண்டாவது டெஸ்ட் – மே மாதம் 23ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை – டாக்கா

# ஜாயா ஆசிரியர் வெற்றிக்கிண்ணம் வரிப்பத்தான்சேனை மஜீட்புரம் அஸ்ஸபா வித்தியாலய ஆசிரியர் அணி வெற்றி

ஹிங்குறாணை குறூப் நிருபர்



இறக்காமம் கல்விச் சமுகமும் நடாத்திய அணிக்கு 09 பேர்களைக்கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட 05 மென்பந்து கிறிக்கெட் சுற்றுப்போட்டியில் வரிப்பத்தான் சேனை மஜீட்புரம் அஸ்ஸபா வித்தியாலய ஆசிரியர் அணியினர் வெற்றி பெற்றனர்.

மர்ஹூம் ஜாயா ஆசிரியர் வெற்றிக்கிண்ணம் 2022எனப் பெயரிடப்பட்டு இறக்காமம் குளக்கரை மைதானத்தில் 2022.03/27 திகதி நடைபெற்ற இறுதிப்போட்டியில் வரிப்பத்தான்சேனை மஜீட்புரம் அஸ்ஸபா வித்தியாலய ஆசிரியர் அணியினர் ஒரு ஓட்டத்தினால் வெற்றிபெற்றனர்.

கடந்த 2022.03.26.27 ம் திகதிகளில் தொடர்சியாக இருநாட்கள் இறக்காமம் கோட்டக்கல்வி அலுவலகத்தின் கீழ் உள்ள 11 பாடசாலைகளின் ஆசிரியர் அணியினரும் சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்களின் இரு அணியினரும் பங்கேற்றன.

இதற்கமைய இடம்பெற்ற இறுதிச் சுற்றுப்போட்டி நிகழ்வு இறக்காமம் கல்விச் சமூகம் என்றமைப்பின் தலைவர் ஏ.அயாத்துவாவா அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ்.எம். சஹுதுல் நஜீம் கலந்துகொண்டு வெற்றிபெற்ற அணியினருக்குவெற்றிக் கிண்ணத்தினையும் வீரர்களுக்கான பதக்கங்களையும் வழங்கி வைத்தார்.

நாணயச் சுளற்சியில் வெற்றிபெற்ற இறக்காமம் அஸ்றப் மத்திய கல்லூரி அணியினர் முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தனர் அஸ்றப் மத்திய கல்லூரி அணியினர் 05 ஓவர் முடிவில் நான்கு விக்கட்டுக்களை இழந்து50 ஓட்டங்களைப் பெற்றனர் .

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வரிப்பத்தான்சேனை மஜீட்புரம் அஸ்ஸபா வித்தியாலய ஆசிரியர் அணியினர் 05 ஓவர்கள் முடிவில் ஒரு விக்கட்டினை இழந்து 51 ஓட்டங்களைப்பெற்று வெற்றிபெற்றனர். இறுதிப்போட்டியில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய மஜீட்புர வித்தியாலய ஆசிரியர் அணியின் எம்.றிசாட். ஆசிரியர் 40 ஓட்டங்களைப்பெற்று ஆட்டநாயபனாக தெரிவுசெய்யப்பட்டார்.

இரண்டாம் இடத்தினைப் பெற்றுக்கொண்ட இறக்காமம் அஸ்றப் மத்திய கல்லூரியின் ஆசிரியர் அணியினருக்கு இறக்காமம் கோட்டக்கல்விப் பணிப்பாளர் யூ.எல். மகுமூது லெவ்வையினால் கிண்ணமும் பதக்கங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் கௌரவ அதிதிகளாக அதிபர்கள், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உறுப்பினர் எம்.எல்.முஸ்மி அசிரிய ஆலோசகர்கள் உட்பட பாடசாலை மாணவர்கள் ,பெற்றோர்கள் உட்பட பலர் கலந்துகொண்டர்.

# "அல்தாரிக்கேயன்ஸ் மெகா பிளஸ்" கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் 2002



கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட தி/அல் தாரீக் மகா வித்தியாலய தேசிய பாடசாலையின் 54 வருட நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட பாடசாலை பழைய மாணவர்களுக்கிடையிலான மாபெரும் "அல்தாரிக்கேயன்ஸ் மெகா பிளஸ்" கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் அல் தாரீக் பாடசாலை விளையாட்டு மைனத்தில் கல்லூரியின் முதல்வர் ஏ.கே.நசூர் தலைமையில் மிகவும் பரவசமாக (26) நடைபெற்றது.

இக்கல்லூரியில் கல்வி கற்ற கல்விப் பொது தராதர சாதாரண பரீட்சைக்குத் தோற்றிய 24 அணிகள் பங்கு பற்றியது.

இதன் ஆரம்ப நிகழ்வு ஊர்வலத்தோடு ஆரம்பமானது நிகழ்வுக்கு பாடசாலையில் கற்பித்த பல முன்னால் ஆசிரியர்களும், அதிபர்களும் மற்றும் பழைய மாணவர்களும் கலந்து கொண்டார்கள். இந்த அழகிய தருணம் ஒவ்வொரு அல்தாரிக்கேயனின் பாடசாலையில் கற்றுக் கொண்டிருந்த அந்த பொற்காலத்தை ஞாபகமூட்டியதாக அமைந்திருந்தது.

இந்த ஒன்று கூடலின் நோக்கம் கல்லூரியின் பழைய மாணவர்களின் ஒற்றுமையுடனான வலையமைப்பினை கட்டியெழுப்புதல்,பாடசாலையின் வளங்களை அதிகரித்தல், நட்புறவுடன்செயற்படல் மற்றும் ஏனைய பாடசாலைகக்கு முன்னுதாரணமாக அமைதல் போன்ற செயற்பாடுகளின் அடிப்படையில் இந்த 54 ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்டம் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

மூன்று நாட்கள் நடைபெற்ற சுற்றுப்போட்டிகள் எட்டு ஓவர்களைக் கொண்டு அணிக்கு பதினொரு பேரை கொண்ட விலகல் அடிப்படையில் அமைந்திருந்ததோடு 24 அணிகளும் ஒன்றையொன்று எதிர்த்தாடின.

இறுதிப்போட்டிக்கு 2002 ஆம் அணியும், 2008 ஆம் ஆண்டு அணியும் ஒன்றையொன்று மோதி 2002 ஆம் ஆண்டு அணி "அல்தாரிக்கேயன்ஸ் மெகா பிளஸ்"வெற்றிக்கிண்ணத்தினையும் பெறுமதியான பணப்பரிசிலையும் தனதாக்கி 2022 ஆம் ஆண்டுக்கான சம்பியன் முத்திரையை அல் தாரிக் விளையாட்டு மைதானத்தில் பதித்தது.

இந்நிகழ்வில் இறுதிப் போட்டிக்கு பிரதம அதிதியாக கந்தளாய் வலயக்கல்விப் பணிப்பாளர், இ.ஜி.பி.ஐ.தர்மதிலக்க, அல் தாரிக் தேசிய பாடசாலையின் அதிபர் ஏ.கே.நசூர், கந்தளாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.எம்.தாரீக் (நளிமி), கல்வி அதிகாரிகள், பழைய மாணவர்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
SLTMOBITEL The Connection

## 44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..........
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..........
வாக்களித்தவர் பெயர் : ..........
முகவரி : ..........
மொபைல் இல. : ..........

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 02-04-2022 இல. 01




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 2ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.